உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சித்தவடமான்மியம்.

இது

ஸ்ரீ வன்றொண்டரவர்கள்

மாணாக்கருள் ஒருவரும்

காரைக்குடி

ராம. கு. ராமநாதச் செட்டியார்

குமாரருமாகிய

சொக்கலிங்கச்செட்டியார்

இயற்றியது.

ஷை சித்தவடம்

க. அர்த்தநாரீசுரதீக்ஷிதரவர்கள்

கேட்டுக்கொண்டபடி

சென்னை:

பிரஸிடென்ஸி அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பெற்றது.

விசுவாவசுஸு சித்திரைமீ.

சிவமயம்.

இச்சித்தவடமாகிய சிவக்ஷேத்திரம், திருநாவுக்கரசு நாயனார், சமணர்கள் ஏவவந்த யானைக்கு எதிரே திருவாய் மலர்ந்தருளிய திருவதிகை வீரட்டானத் திருப்பதிகத் துள்ளே,

# தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

ஒத்தவ டத்திள நாக முருத்திர பட்டமி ரண்டு
முத்து வடக்கண் டிகையு முளைத்தெழு மூவிலை வேலுஞ்
சித்த வடமு மதிகைச் சேணுயர் வீரட்டஞ் சூழ்ந்து
தத்துங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன் றுமில்லை யஞ்ச வருவது மில்லை.

திருச்சிற்றம்பலம்.

என்பது முதலிய தேவாரங்களாலே துதிக்கப்பெற்றது.

இத்தலத்துக்குரிய தேவாரத்தனித் திருப்பதிகங்கள் முன் சிதம்பரக்ஷேத்திரத்திலே வன்மீகங்கொண்ட தேவாரப்பதிகங்களோடு சேர்ந்தனபோலும்.

இந்நூல் பெரியார்பணியை மறுத்தற்கஞ்சிப் பெரிய புராணம் உபதேசகாண்டம் முதலிய முன்னூல்களில் இத் தலசம்பந்தமாயுள்ள சரித்திரங்களையும், இத்தலத்தைச்சார்ந்த பற்பல புராதனசாதனங்களில் உள்ள சரித்திரங்களையும், தெரிந்தெடுத்துச் சிற்றறிவினனாகிய என்னாற் செய்யப்பெற்றது.

"முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும், பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கு—முன்னோரின், வேறுநூல் செய்துமெனு மேற்கோளில் லென்பதற்குங், கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்." என்னும் விதிபற்றி "தேவுடனே கூடியசொற் செழுந்தமிழோர் தெரிந்துவாத்த, பாவுடனே கூடியவென் பருப்பொருளும் விழுப்பொருளாங், கோவுடனே கூடிவருங் குருட்டாவு மூர்புகுதும், பூவுடனே கூடியநார் புனிதர்முடிக் கணியாமால்." என்று உமாபதிசிவம் திருவாய்மலர்ந்தருளிய திருவருட் சுருதியைச் சிரமேற்கொண்டு, அறிவிலியாகிய என்வாய்ப் பிறந்த புன்சொற்கள் ஒப்புயர் விகந்த அற்புதவாய்மைத் திருவருட்பாக்களோடுகூடின் இன்சொற்களாய் யாவராலும் அங்கீகரிக்கப் பெறுமென்னும் ஆசையால் இதனுள்ளே சிற்சில இடங்களில் பெரியபுராணத் திருவருட் பாசுரங்கள் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

அவ்வருட்பாசுரம் எவ்விடத்திருப்பினும், திருவருள் விலாசத் தொருபெரும்வாய்மை, அருமையற்புதப் பொரு ணயமாதியால், எத்தகு கவியினும் ஒத்தெண்ணுறு து, வேற் றுமை தெரிக்கும் பேற்றினவாகும். ஆயினும் என்போ லுஞ் சிற்றறிவினர் சிலர், என்புன்கவியோடு ஒத்தெண்ண வும் பெறுமோவென்று அவ்வபசாரத்தையஞ்சி ஆங்காங்கு அத்திருவருட்பாசுரங்களின் முதலில் * இவ்வடையாளம் இடப்பெற்றுள்ளது.

---

# சிறப்புப்பாயிரம்.

திருப்புத்தூருக்கு அடுத்த மகிபாலன்பட்டி

## குமு. மு. கதிரேசச்செட்டியார்

இயற்றியது.

சீர்கெழுபஃ றலையரவின் முடிக்கிடந்த நிலவுலகிற் றிஙாநீர்
கொன்றைத், தார்கெழுசெஞ் சடிலவிறை தடாதகையை
மணந்தரசு தனிந டாத்தும், போர்கெழுதென் னாட்டினியல்
பேசலெளி தோவதனிற் பிறங்குஞ்சீர்த்திக், கூர்கெழுவேல்
விழிச்செல்வி மருகியொடுந் திகழ்காரைக் குடியாமூதூர். (௧)

இன்னவள நகரினுல கியற்றியமா தவப்பயனே யிராமநாத,
னென்னுமொரு வணிககுலப் பெருந்தகைபாற் புருடவடி
வெடுத்தாங் குற்றோன், றன்னிகரி லிலக்கணமு மிலக்கியமு
நனிதேர்ந்தத் தகையோர்க் கெல்லாம், பன்னுகுர வனுமாகி
யென்னுயிரி னெனக்கினிய பண்பு மிக்கோன், (௨)

விரிவாய வேதசிவா கமங்களெலாம்பதிசிவமேவிளக்குமுண்
மைப், பரிவாலச் சைவமெனும் பயிருலகப் பணைவளர்வான்
பகர்பன்னூலாம், பொருளார்நன் னீர்பொழிபாக் கண்ணி
யகொண் மூவனையான் புலனில் லோருந், திரிவாய பசுநூ
ல்கற் றுளமழியா வகைதெருட்டுந் தெருட்சி வாய்ந்தோன்.

தானறிநூன் முறையொழுக்காற் றெரித்தொளிர்வோ னகம்
புறமுஞ் சாலப் போற்றுந், தூநெறியோ னருள்பொறை
யின் சொல்வாய்மை யரணெனத்தற் சூழப் பெற்றோன்,
வானுறுவண் கற்பகமோ ரறிவாகிக் கீழுறமேல் வயங்கும்
வண்மைப், பானிறையோர்ந் தளித்திசைகொள் சொக்கலிங்
கப் பெயர்புனைந்த படிமையாளன். (௪)

மாதொருகூற் றவன்புகழா மறைப்பொருளைச் செந்தமிழால்
வழங்கினாரு, ளோதிருவர் வரும்பேற்றை யுடையதிரு முனை
ப்பாடி யொருபேர் நாட்டிற், றீதிகந்த செம்மணியாற் கன்
னலுகு தரளத்தாற் செய்கடோறும், போதவிழ்பு தாமரை
யுங் கயிரவமு மிரவுபகல் பொலிசீர் சான்ற. (௫)

சித்தவட மெனும்பதியின் மான்மியத்தைச் செந்தமிழாற்
சேக்கி ழார்மு, னுெத்ததிரு வாய்மலர்ந்த வுலகெலா மென்
னுமருளுனாமுற் கொண்ட, பத்திமிகுந் திருத்தொண்டர்
புராணச்சொற் பொருளெனுந்தம் பதிக ளீன்ற, வுத்தமமா
வருண்மகவீ தெனப்புலவர் பாராட்டி யுவந்துபோற்ற (௬)

சுருங்கியசொற் பரந்தபொரு டுலங்கிடனு யணிகணனி துவ
னறு மில்லாய், வருங்கதிரோன் போலாது மாணவர்த மக
விருளை மடிக்குஞ் சோதி, தருங்கதிராய்த் திகழுநறுந் தனி
த்தேறல் கரும்பிரதஞ் சமைந்த கீரம், ஒருங்குகுழீஇப் போ
ந்ததெென வுரைத்தனனிந் நூன்மகிமை யுரைப்பார் யாரே ()

வம்மின் புலவீரிம் மான்மியமாம் பேரமுதைத்
துய்ம்மி னிருமைச் சுகப்பெறுமின்—செம்மை
தரும்பே ரறிவெய்திச் சைவ நெறிக்கண்
மிரும்பேறு பெற்றுய்யு மின்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | பாட்டு | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௯ | ௭ | ௪ | இதுவொபொழுது | இதுபொழுது |
| ,, | ,, | ,, | யிவ்ளி | யிவ்வொளி |
| ௧௩ | ௨௮ | ௪ | புன்ளன | புள்ளன |
| ௧௪ | ௧ | ௪ | வடத்தியன்மு | மகிழ்வுறமு |
| ௧௫ | ௬ | ௨ | சேக்ழார் | சேக்கிழார் |
| ௧௬ | ௧௩ | ௧ | புத்தூர | புத்தூர் |
| ௧௭ | ௧௬ | ௩ | சிததிரு | சித்திரு |
| ௨௩ | ௪௯ | ௧ | தவசின் | தவிசின் |
| ௩௦ | ௫௪ | ௧ | லிப்ப்டி | வி:ப்படி |
| ௩௧ | ௫௭ | ௪ | சிவத்துஞ்சார் | சிவத்துவஞ்சார் |
| ௩௨ | ௬௩ | ௨ | தாதையார் | தாதையா |
| ௪௩ | ௧௨௩ | ௨ | நாணர் | நாணோர் |
| ௮௦ | ௪௦௩ | ௨ | வித்நு | வித்து |
| ௮௧ | ௧ | ௪ | பூண்டு | பூண்டும் |
| ௮௨ | ௬ | ௫ | ளாலவகித்து | ளால்வகித்து |
| ௯௪ | ௪ | ௩ | னெறிக்சே | னெறிக்கே |
| ,, | ௬ | ௨ | டீசனெனன | டீசனென |

சிவமயம்.

# சித்தவடமான்மியம்.

## காப்பு.

நீர மான்மதி வேணிய னேயமார்
சீர மான்மதிற் சித்த வடத்திய
றேர மான்மதி தேற்றுகென் றைங்கரப்
பேர மான்மதி யாப்பதம் பேணுவாம். (க)

## வாழ்த்து.

வான்வ ழங்குக மல்குக பல்வளந்
தான்வ ழங்குக பூதிமுற் சாதன
மேன்வ ழங்குக வேத சிவாகமங்
கோன்வ ழங்கரு ணீதி குலாவுக. (உ)

## நூற்பயன்.

மன்னு சித்த வடப்பெரு மான்மியஞ்
சொன்ன வுத்தமர் கேள்விசெய் தூயவர்
துன்னி கச்சுகந் துய்த்தனர் முற்றுமை
தன்னி டத்தரன் பூங்கழல் சார்வரால். (ங)

## கடவுள்வாழ்த்து.

### ஆதிசிதம்பரேசர்.

பூமன் மாதவ ஞுதியர் போற்றிய
காமம் யாவுங் களிப்ப வளித்திருஞ்
சேம வாழ்வரு ளாதி சிதம்பர
நாம நாயகன் சேவடி நாடுவாம். (சு)

### சிவகாமியம்மை.

தாம வல்லி மலர்ப்பதந் தாழ்ந்தவர்க்
கியாம வல்லின் மறைக்கு மிருண்மலச்
சேம வல்லி சிதைக்குஞ் சிவைசிவ
காம வல்லி யடிக்கம லங்களே. (ரு)

### வீரட்டேசுரர். வேறு.

சுருதிநிய மங்கடந்துந் தொண்டரிற்போந் தருளுநிலை தல
ங்கப் போக்கு, வரவிலனு கியுஞ்சித்த வடமடத்திற் கதிகை
யொரீஇ வந்தாங் கன்பு, தருதிலக வதியன்னை தனக்கருளிட்
புரமூவர் தமக்காங் கெய்தி, யருள்பெரிய வம்மையிட
தமர்வீரட் டேசனடி யகத்துள் வைப்பாம். (

### நடேசர். வேறு.

அன்னை யாயுல கீன்றவ ளாருயிர்க்
கின்ன லந்தரற் கேன்றுகண் டின்புற

நன்னா ணாங்கொழி னித்த நவிற்றிடு
மென்னை யாளுடை யான்கழ லேத்துவாம். (எ)

## தக்ஷிணாமூர்த்தி.

குரவ ரென்று குறிப்பவர் யாருந்தங்
குரவ னென்று குறிக்கு நலத்தினக்
குரவு பூண வடநிழல் கொண்டமர்
குரவ னுண்மலர்ச் சேவடி கூறுவாம். (அ)

## கணேச சுப்பிரமணியர்கள்.

இளவ லின்புற வானனக்கேற்பவோர்
களப மாகிக் கடிதுமீசன் றனையவ்
வளவின் வல்லி வலிய வணைப்பவின்
புளம கிழ்ந்த வொருவனை யுன்னுவாம். (கூ)

## வீரபத்திரர், வைரவர், நந்திகேசுரர்.

தக்கன் மாமகஞ் சாய்த்த தலைவனைச்
செக்கண் மான்மகன் சென்னியங் கையனை
முக்க ணைந்தை கயிலையின் முன்னமர்
மிக்க நந்தி விமலனைப் போற்றுவாம். (க0)

## விண்டு, இலக்குமி, சரஸ்வதி, அகத்தியர்.

உலகை ளிக்கு மொருவ னிறத்தமர்ந்
தலரில் செல்வ மளிக்கு மிறைவினூற்

நூல்கொள் பாரதி தண்டமிழ் தந்தருண்
மலய மாமுனி பாதம் வழுத்துவாம். (கக)

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் வேறு.

அமுதுணர் வளிப்போ ரன்னை யத்தரே யவரே யீச, னுமை யவ ரிருவே றற்றிங் கோருரு வாயும் வாம, நிமிர்வலத் தமுது சுட்டந் நிலையுணர்த் திளங்கோ லத்தோ, டமைய ருள் காழி வாழ்சே யிணையடிப் புணைபெற் றுய்வாம். (கஉ)

## திருநாவுக்கரசுநாயனார்.

தொடர்வறத் தொடர்ந்து சுத்தாத் துவிதவாழ் வொன்றி நின்று, மடிமையென் றுங்குங் காட்டற் கஞ்சலி கரமும் பாசங், கடியுழ வார ஞானக் கதிர்ப்படைக் கலமுங் கொ ண்ட, விடையரு வன்பின் கோலத் திறைவனை யிறைஞ்சி வாழ்வாம். (கங)

## சுந்தரமூர்த்திநாயனார்.

சிவராச யோகச் செங்கோல் செந்நெறிச் செலுத்துஞ் செ ங்கோ, றவராசச் செங்கோல் செண்டு தம்பிரான் றோழ ரென்பேர், புவிராச மன்றற் கோலஞ் சிவன்றரப் பூண்ட நாவற், கவிராசராச நம்பி கனைகழ னினைவிற் கொள்வாம்.

## மாணிக்கவாசக சுவாமிகள்.

கற்பன வமையு மென்று கழறியு மிடங்கைக் கொண்டே, தற்பரன் கைச்சாத் தென்று தனித்திரு வாச கத்தை, யந்

பினைந் தெழுத்தெண் கண்டி வலங்கைக்கொண் டருளு மண்ணல், சிற்பத கமல நாளுஞ் சென்னிவைத் தின்ன தீர்ப்பாம்.

## சண்டேசுரர், அறுபத்துமூவர், நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார். வேறு.

தம்பி ரான்பொற் சடைக்கொன்றைத் தாரினேன்
பம்பு தொண்டத் தொகையமர் பண்பினோர்
நம்பி யாண்டாரெ னம்பி யுலகெலா
மென்பொன் வாய்மைபெற் ருன்கழ லெண்ணுவாம். (கசு)

## மெய்கண்டசிவாசாரியர். வேறு.

பேயடை யா பிரிவெய்தும் பிள்ளையினே டெனுஞ்சுருதி
வாய்மைநிலை யாகமங்கி மலிதவமே வலிதாகத்
தூயதிரு வெண்ணெய்நல் லூர்ச் சுவேதவனப் பெருமாளென்
ருயவருண் மெய்கண்டா னடிக்கமல முடிக்கணிவாம். (கஎ)

## அருணந்திசிவாசாரியர்.

அரியசக லாகமபண் டிதப்பெயரே யடுத்திருந்தும்
பெரியமலம் பிரியமலப் பெறவினவி மெய்கண்டான்
விரியமல மலரடிக்கீழ் வீழ்ந்திறுகப் பற்றிநின்றே
துரியநிலை மேனிலைநந் தூயனடி யேபணிவாம். (கஅ)

## மறைஞானசம்பந்தசிவாசாரியர்.

மறைஞான சம்பந்தம் வாய்ந்துமுமா பதிசிவத்தை
மறைஞான சம்பந்தன் வாக்கினறச் சித்தாந்த
மறைஞான சம்பந்த மன்னருளைக் களித்தாண்ட
மறைஞான சம்பந்த மணியெமுடி மணியாமே. (கக)

## உமாபதிசிவாசாரியர்.

வையகமின் புறநின்ற மலரடியென் * றெடுத்தாண்ட
செய்யதிரு வடியென்றுந் திருவருண்மாண் டெளிந்துலக
முய்யவருள் வாய்மலர்ந்தெ முறுகணறத் தெறுகணருட்
டுய்யவுமா பதியடிக டுதியடிக டிதியாமே. (உo)

## பட்டினத்தடிகள். வேறு.

காதற்ற வூசி வாச கந்நசை யெல்லா நீக்கத்
தீதற்ற தனிநிர் வாண தீக்கையாத் திகம்ப ரங்கொண்
டேதற்ற துறவுக் காணி யெனவமர்ந் திரவு கங்குற் [வாம்.
போதற்ற நிலைகொள் வெண்காட் டடிகடாள் போற்றி வாழ்

## சித்தவடஞ்சார்ந்து திருவருள்பெற்றோர். வேறு.

திருவமிகு சித்தவட மாநகர்புக் காதி சிதம்பரநா யகன்மு
னஞ் சேர்ந் தருணிலைபெற் றவரெம், பெரியர்திரு நாவரச ர்
திலகவதியிவரைப் பெற்றுயரும் புகழனர் மாதினியார் பே
ணும், பொருவில்புக ழப்பூதி வன்றொண்டர் திருவைப் புண

---

* உம்மை தொக்கது.

ர்திருமால் கருடனகத் தியமுனிவன் வானில், வருமதியிந் திரன்றனத ஞதிதிரு வாளர் மாணிலைமை பேணிநிதம் வழு த்துதல்செய் திடுவாம். (உஉ)

## கடவுள்வாழ்த்து முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். உஉ.

---

## பாயிரம.

திருவருளால் வெள்ளிபத்திற் றிருக்கயிலைக் கெமதுகுல தெ ய்வநம்பி, மருவுறுநாட் டாழ்வாயின் மாணவமா முனிவர் குழா மருங்கு சூழத், தருமுபமன் னியபகவான் சைவநூ லெடுத்தோதிச் சாருங் காலைப், பெருகொளியொன் றெதிர் தோன்றப் பேரன்பே யுருவாயப் பெரியோ னங்கே. (க)

திருத்தகுமவ் வொளிதோன்றுந் திசைநோக்கித் துண்ணெ னமேற் செங்கை கூம்பக், கருத்தொருமித் தெழுந்தன்பு கனிந்தொழுகா னந்தவெள்ளக் கண்ணீர் மாரி, பெருத்தெ ழுகின் றருளினனப்பெறலருமற் புதநோக்கிப் பெருந்த வத் தோ, ரருத்திமிக வுடனெழுந்தவ் வாசான்பொற் கடிக்கமல வடிக்கட் டாழ்ந்தே. (உ)

எமையுடையா யருட்கோலத் தெழிலுடையா யிந்துடையா திலங்கும் வேணி, நமையுடையான் றனையன்றி நாளுடை

யார் யாவரையு நாடா வுள்ளத், தமையுடையாய் கமையு டையா யருளுடையாய் தெருளுடையா யளவா வின்பக், கமையுடையாய் முமையுடையாய் கண்ணுடையாய் விண்ணு டையார் கருதும் வாழ்வே. (ங)

எவ்வுலகு மீடேற விவ்வுலகம் பீடேற விலங்குஞ் சோழர் தெய்விகமா நாடேறச் சீவரெலாம் வீடேறச் சிற்ச பேசன், றிவ்வியவைந் தொழினடனஞ் செய்தருளத் தானிபனுய்த் தேசமெல்லா, முய்வுதரும் புலிமுனிசெ யொளிர்தவமே யுருவாகி யுதித்த தோன்றல். (ச)

போதில்வரு தாதைதரு புத்திரனும் வசிட்டமுனி பொருவி லார்வ, மாதருற வெடுத்தணைத்து மகிழ்மருகா முருகாவம் மாத வன்பாங், கோதுறுவான் பசுப்பாலுண் டுளபழக்கத் தாற்றுதை யுடசத் தப்பா, லாதரமுற் றரனளிப்ப வருட்க டலே பாற்கடலா வருந்து மெந்தாய். (ரு)

## வேறு.

சம்புவி னடிப்போ தல்லாற் றடக்கைகூம் புதல்வே றெங்கு மெம்பிரா னின்க ணின்றே யீண்டெழுந் திருகை கூப்பி யன்புரு வாகி நின்று யற்புத மிதென்கொ லைய நம்புமெஞ் சங்கை நீங்க நவில்கென நமந்தா மீட்டும். (சா)

அதுதிருச் செவிக்கொண் டெம்மை யாளுடை முனிவர்கோ மான், முதுவுண ரன்பி னந்தண் முனிவரர் கேட்பவோதும்,

விதுமுடி யவனே தானும் விமலவன் றொண்ட வாழ்விங், கிது
வொபொழுதனைழப்பப்போதுமெழுச்சியிவ்ளியின்றோற்றம்.

அனையவன் றொண்ட நாமத் தருமணி யெம்மா லேனை,
முனிவரா லயன்மா லாதி முதல்வரா லுருத்திராதி, புனித
ரா லெவர்க ளாலும் பொற்கழல் பணிந்து போற்றுந், தனி
முதற் பொருளென் றோதுந் தத்துவ முணர்ந்த நெஞ்சம்.

எவ்வகைத் தடையி னாலு மிடர்கொளத் தாழ்க்கு மோநேர்
செவ்விதி னோடி யன்னோன் றிருவடி நிழற்றி னைத்த
திவ்விடை யுடலந் தானே யெழுந்துகை குவிந்து நின்ற
கவ்வியற் காந்த நேரிற் கரும்பொன்சேட் டித்தல் போல. ()

உம்மைநற் றவப்பே றென்கோ வொன்றியே நிரந்த ரஞ்செ,
யிம்மைநற் றவப்பே றென்கோ விந்திர னயன்மால் வானோர்,
செம்மைம முனிவர் சூழ்ந்து சேவிப்ப வெண்க ளிற்றி, னெ
ம்மையா ணம்பி போது மெழுச்சிநேர் காணப் பெற்றோம்.()

என்றிவை யருளிச் செய்ய விருந்தவச் செல்வர் யாரு
மன்றுளத் தார்வங் கூர வடிக்கடி யிறைஞ்சி யெந்தாய்
நன்றுட லெடுத்த பேறு நயந்தன மனைய நம்பி
தன்றளிப் புகழே யன்றோ தக்கது கேள்விக் கென்றார்.(கக)

பின்னரு மடியிற் றாழ்ந்து பேசுவா னைய நின்வாக்
கின்னிது காறுங் கூறு மிறைவன்மான் மியங்க ளெல்லாம்
பன்னுமோ ருடலே யிந்தப் பரமன்மான் மியமே யான்மா
வுன்னுயி ருடன்சேர்ந் தன்றி யுடறனித் துறுவ துண்டோ

ஆதலா லுயிரே யாகு மத்தகு மான்மி யத்தை
யோதலா லடியே முய்ய வுரைத்தருள் செய்க வைய
வீதலால் வேட்கை யாது மின்றெமக் கென்று ரன்னோர்
காதலான் மார்த்த மென்றே கடைப்பிடித் துலக முய்வான்.

தீக்கையின் றியற்றும் பூசை செபங்கணிட் பலமென் றோர்ந்த
வேக்கமிக் கடைந்த கண்ணற் கிணையடி சென்னி சூட்டி
யாட்கொளீஇச் சைவ தீக்கை யளித்தரு ளண்ண னம்பி
தாட்கடிக் கமலப் போது தன்றிரு முடியிற் சூடி. (கச)

திருவுள்ளம் வாய்மை கிட்டைத் திறத்தினத் துவிதா னந்தப்
பெருவெள்ளத் துள்ளு லாவப் பேருல கெல்லாஞ் செய்த
பொருவெள்ள லருந்த வத்தாற் புனிதவன் றெண்ட நாமத்
தொருவள்ளல் சரித வாய்மை யுண்மலர்ந் துரைப்ப தானுன்.

அத்திரு நம்பி யாரூ ரண்ணன்மான் மியஞ்சொல் காலைச்,
சுத்தமாண் டமிழிற் றெண்டத் தொகையுவந் தனைய நம்பி,
பத்தியி னூரு ரின்கட் பகர்ந்தமை யுரைப்பக் கேட்டோ, ரித்
தொகைத் தொண்டர் யாவ ரியம்புகென் றிறைஞ்சி னூரால்.

அவர்திருத் தொண்டெ லாமு மடைவினி லருளிச் செய்தே,
தவர்முடி யடிகள் சூடுந் தம்பிரான் றோழர் வேழ, மிவருபு
கயிலைக் கேகு மிருஞ்செய லீற்றிற் போற்றிப், புவனமுற்
றுய்யும் வாய்மைப் புனிதமாண் சரிதஞ்சொன்னுன். (கஎ)

## வேறு.

விரிதருமிச் சரிதநயம் விளம்புபமன் னிபபத்த விலாச மெ
ன்பேர், மருவுமிஃ தன்றியுந்தென் மலயமுனி யுங்காதல் வச
னுய்த் தற்சூழ், திருமுனிவர்க் கோதியகத் தியபத்த விலாச
மென்றோர் தெருணூ றந்தா, னருள்சிவமே தாமாமிவ் வை
யர்தரு மிருநூலு மகில மெங்கும். (கஅ)

பொருவில்சிவ புராணசிர பூடணமாய் விளங்கிடவும் பொ
ருப்பி லன்னைக், கொருமையுறச் சிவபெருமா னுபதேச ரக
சியத்து முந்த வாய்மை, தருசரித மருளினனித் தகைநோ
க்கி னுண்ணறிவு சாரூழில்லார், வருமெனைய புராணுதிவகை
நூல்போ லிதுவுமிரு மாத வத்தோர். (ககூ)

தாமுறைசெய் புராணமலாற் றனிமுதலாம் பசுபதிவா சக
மோவென்றிங், காமருள்கூ றாதுவே தாகமம்போற் சிரமே
றகொண் டகில மெல்லா, மேமுறவே திருவுளங்கொண் டிசை
த்தருளி னுன்பரம னென்ப தல்லா, ளுமுணரு கிபமென்றே
நாட்டுறுமிந் நூன்மூன்று நவிலுங் காலை. (உ௦)

வடமொழியிற் சிரமணியா வயங்குறத்தென் றமிழ்நாட்டின்
மாத வத்தாற், படரொளிசூழ் சிற்சபையிற் பரன்சேக்கி
ழார்க்கருளிப் பரம வானின், றுடனுலகெ லாமெனுஞ்சொ
லுனாநூற்மூற் றுறுங்காறு மோவா வோசைத், தொடர்வு
றமா மணியொலிபோற் றாய்தளித்தந் நூன்முழுதுஞ்சொல்
வித் தானல். (உக)

அத்தகுநா றன்பெயரா லருட்கலைக ளெவற்றினுமிக் கதிக மென்றே, யெத்தகையோ ரும்புகழ வியற்பெரிய புராண மென விலங்கு மீதி, னத்தருள்கூர் வாகீசர் நம்பியிவர் புரா ணத்தினடைபெற் றேருங்குஞ், சித்தவட மான்மியமித் திரு ப்புகழைத் தனித்தெடுத்தோர் தென்னூலாக்கி. (௨௨)

நீதருகென் றத்தலத்தி னிகழ்வாசன் சிவநேச ~ கம தே சன், மாதவனப் பூதிகுல மரபினன்கங் காதரப்பேர் மறை யோன் மைந்த, னேதமில்சீ ரர்த்தநா ரீசுரசன் மாவென்ன வியம்பு நாமன், மேதகுநைட் டிகப்பிரம சரியநிலை நிற்கின் றுன் விளம்பி னுனல். (௨௩)

## வேறு.

இவ்வுரை தகுநீ யிவ்வா றியற்றுதி யென்ன வேவிச்
செய்வித்தா னொருவ னன்னுன் சீர்த்திவல் லுநரிங் காரே
யவ்விறை பெயரோ வென்னி லம்பல வாண நாமத்
திவ்விய நாவ லாளன் சிவத்துவம் பழுத்த சீலன். (௨௪)

என்னையா ரருள்வி லாசத் தியைத்திரண் டற்ற வின்ப
மெய்ந்நிலைக் கேது வாய மெய்கண்ட சுருதி வாய்மை
தன்னிலை யிலங்கக் காட்டுஞ் சதுரனிங் கவனே யாகு
மிந்நிலைக் கேவு கர்த்தா யான்வினை முதலொன் றல்லேன்.()

அன்னையர் பிதாக்கள் பார மாமொன்று காட்டித் தூக்கு
கென்னிலாங் குழந்தொ ணும விளஞ்சிறு ரினைய வாற்றூர்

முன்னவிலை திடனுய்த் தாமே முடிப்பதிவ் வுலகிற் கண்டாம்
பின்னையேதெமக்கிந் நூல்செய்பெற்றியிற்றடையொன்றம்ம.

## வேறு.

இச்சித்த வெலாமளிக்கு மிச்சித்த வடமகிமை யினை * மாக்
காதை, நச்சித்தன் வாப்மலர்ந்த நாவையர்சீர்ச் சேவையர்
கோ னயந்து பல்வே, றுச்சித்தம் பொருள்விரிய வுரைதொ
குத்த வகைவிளங்க வுணர்வின் றேனு, மச்சித்த மகிழ்ந்த
ருளு மண்ணல்கழ லெண்ணியடிக் கடிதாழ்ந்தேத்தி. (உஎ)

சொன்னதனி மாக்கதையிற் றெருகுத்தசில விரித்தும்விரி
தொகுத்து மேலு, நன்னருப தேசகாண் டம்முதனு லினு
மிந்த நகர்முன் னுகப், பன்னுமுனைப் பாடிநகர்ப் பண்டுளசா
தனலிகிதப் பகுப்பி னுள்ளு, மிந்நகர்மாண் புன்ளனவோர்ந்
தெடுத்துமொரு காதையென விசைத்து ளேனல். (உஅ)

---

* மாக்காதை, - பெரியபுராணம்.

## பாயிரமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௩௦.

---

## சித்தவடச்சருக்கம்.

திருமா தமரு மணிமார்பன் சென்று காணத் திருவடிக,ளொ
ருவா தொளிரு முளக்கமலத் துறுவர் குழாங்க டமைப்பா
ர்த்தெம், பெருமா னுபமன் னியபகவான் பிறங்குஞ் சித்த
வடத்தியன்மு, னருள்வாய் மையினு ரனியுலகெ லாம்பன்
முறைபார்த் தன்புருவாய். (க)

உள்ள படிபே ரானந்த வுததி மூழ்கி மெய்த்தொண்டர், வள்
ளன் மலிபே ரன்பமுது மடுக்கு மிறைபே ரருளமுதுந், தெ
ள்ளு முணர்வாம் வயிறூரத் திடபத் திமைத்தே மலர்க்கரத்
தா, லள்ளி யள்ளி நுகர்ந்துநுகர்ந் தளவாக் களிகூர்ந்ததும
யமாய். (உ)

சைவ தீக்கைச் சிவநியமச் சார்பினோர்க்குச் சாற்றுமிவ்
முய்வைத் தருநூ லெனுமார்வ முந்த வெளிவந் துளைப்பள
வே, செய்வைத் தழலி னெஞ்சுருக நிகழ்கம் பலையுங் கண்ணீ
ருந், தெய்வத் தனிநாத் தழுதழுப்புந் திருவாய் குழறுமொ
ழிவாய்ப்பும். (ங)

இன்ன வகைபற் பலகுணனு மியல்பி னளிக்கு மியற்றுகப்,
பன்னு மாண்டா னடிமைகளின் பான்மை திருத்தொண்
டின்பகுதி, மன்னு மன்பின் வகைக்செயல்கள் வழங்கு மரு
ளின் றெகைவிரிக, ளன்ன வற்றி னியல்பாய வருமை பெ
ருமை பாராட்டி (ச)

திருமாண் சைவ மரபிலங்கச் செப்பற் கருஞ்சம் பிரதாயம்,
பெருமாண் டனிப்பே ரன்பொழுகப் பேணி யுரைவாக்கிய
வகையுள், வருமாண் பொருளின் றிருநயங்கண் மற்றமொ
ருங்கே தொகுத்துலகுக், கருண்மா மூல பண்டாரமாக வரு
ட்சேக் கிழார்பெருமான். (ரு)

## வேறு.

அருளிய பெரிய புராணத்து ளிலங்கு மரும்பொருட் பகு
திகணோக்கித், தெருளிய விரிய வுரைத்தரு ணலனஞ் சேக்
ழார்க் கெளிதலா லேனைப், பொருளியன் மனத்தி னரிபிர
மாதி புலவர்க்கு மரிதெனப் புகன்று, கருளியல் கடந்த
வுமாபதி சிவமே கழறிவற் புறுத்திடுமென்றால். (சா)

ஏழைநா யடியே னறிவொரு சிறிது மில்லவ னல்லவ ரிட
ஞ்சே, ரூழையோ நிலைபெற் றுயவுமொட் டாத வுறுவினைச்
சிறியனென் றலபல், பீழையேன் வழியென் றொழிவுறு குழி
யிற் பெரிதுவந் திறங்கியாழ் பேதை, காழையோமனனு மெ
ன்செய்கேன் பெரியர் கட்டுரை மறைதரு கனமும். (எ)

புலவரிங் கிவன்செய் நூல்பல வழுக்கள் பொதிந்ததென்
றுல்வரு வனவும், பலனுறத தூக்கி முன்னது கனஞ்செய்
பான்மையாற் பரவைகோ ணுதி, நலருப மனியர் சேக்கிழா
ராதி நாயகர் சேயடி நளினந், தலைமிசை யடியேன் றரித்
தொரு வாறு சாற்றுவான் றொடங்கினே னம்ம. (அ)

நால்வர்பொன் பாடல் பெறுதிருத் தலஞ்சேர் நாடிமூ வேந்தர்பே ராதி, யால்வரு நாடா மவைகள்பூ மகட்கோ ராரத்தின் சூழ்மணி யாக, மேல்வரு நடுநா யகமணி யாகி விரவியன் மேன்மையை விளக்குஞ், சால்வரு தன்பே ரிடுகுறி யளவிற் றகவுணர்த் திடுநடு நாடு. (கூ)

நவிலுமிந் நாட்டுட் டிருமுனைப் பாடி நாடத னுள்ளொளி யாகித், திவளுமா சமய குரவர்நால் வோருந் திருவவ தாரஞ்செய் திடமா, தவமுறு நாடோர் மூன்றிரண் டொவ்வோர் தலைவரைத் தந்ததிந் நாடே, யவர்தமி லிருவ ரவதரித் திடச்செ யருந்தவம் புரிந்ததா ரளப்பார். (க0)

இன்னநன் னாட்டிற் கண்ணுதற் பரன்வீற் றிருந்தரு டலம்பல விவற்றுண், மன்னுமேழ் சிறந்த விவற்றினுட் சித்தவடமெனுந் தடநகர் வயங்கு, மன்னமா நகரங் கிழக்கிருகுரோசத் தளவினி லதிகைமா நகரந், தென்னுல கணிமை நிறைபுனற் கெடிலச் சிறப்புயர் சிவமா நதியே. (கக)

அணியதென் மேற்கோர் கடிகையி லெம்மை யாளுடை யரசவ தரித்த, கணிதிரு வாமூர் நிருதியி லாறு கடிகையி லெம்மையா ளுடைய, மணிதிரு நம்பி யவதரித் தருணு வற்றிரு நகரநேர் மேற்கோர், குணிசெய்கா வதத்திற் றிருவெண்ணெய் நல்லூர் குலவுகாற் றிசையிலோர் கடிகை. (கஉ)

தனின்மணம் வந்த தகுதிருப் புத்தூா சாற்றுநேர் வடக்கிரு கடிகை, யினில்வரு பெண்ணை நதிதிருத் துறைபூ ரெனுந்

திருத் தலங்களோ ராறும், வினவுமா றிரண்டுஞ் சூழ்வுற நா
ப்பண் வீற்றிருந் தருளுமே வினைய, புனிதமாண் சித்த வட
ப்பெருந் தலத்தின் பொற்பெனுற் புகலுதற் கெளிதோ. ()

தெருளுறு கெடில மாநதி நிருதி திசையில்வாழ் நாவலூர்த்
தென்பால், வருநர சிங்க முனையரெம் மடிகள் வன்றொண்
டர் தமைமக வாக்கொண், டருளர சமர்மா ளிகைவட பாற்
சென் றத்திரு நாவலூர்க் கீழ்பாற், றிருமியுத் தரவா கினியி
னோர் கடிகை சென்றுபின் பூர்வத்திற் செலுமால். (கச)

பெண்ணைமா நதிதா னந்தியெம் பெருமான் பெருவனைப் பிற
ந்தவன் பதத்தவ், வண்ணறன் பாதோற் பவைபின கினிமு
னரும்பெயர் புனைந்துபா வனமா, யெண்ணுல குயப்போந்
தலைபுகுந் தின்புற் றிலங்குமா லிந்நதி யிரண்டும், வண்ண
மார் சித்த வடத்திருத் தரள வடத்திரு பாலினும் வயங்கும்.

இத்திரு நகர்க்கோ ரின்னுயி ராகி யிலங்குமா லெம்மையா
ளீச, னத்திரு நடமுன் காட்டிவேட் டமரு மன்பினர்க் கின்
னளீ டருளுஞ், சித்திரு நிபத்தாற் றரித்தரு ளாதி சிதம்பரே
சத்திரு வருணு, மத்திரு மூர்த்தி யாய்ச்சிவ காம வல்லியோ
டமர்ந்தருள் கோயில். (கரு)

இதமரு ளாதி சிதம்பர நாத விலிங்கமேன் முகத்திருந் தரு
ளக், கதியுயிர் பெறநேர் காண்டகு கருத்தோ கவினிடை யறு
துகாண் பிருப்போ, பதியலாற் பரமேற் பாவையர் பார்க்கப்
படாதெனப் பயிற்றிடு பண்போ, முதசிவ காம வல்லிபூர்
வாபி முகத்தமர்ந் தருளுமக் கோயில். (கஎ)

---

† உலகு - திசை.

தன்னரு ளடைந்தார் தனையொரு வாமற் சார்தனேர் காட்டுதே றகையப், பொன்னிற மாலிந் தறவன்புள் சுநாசி புகழு ஞர் மாதினியாரோ,டென்னையா ளரசுநம்பியப் பூதி பின்னவர் விம்பமோ டென்றும், பன்னுறு பரிவா ரங்கள்சூழ் வுற வெம் பரமன்வீற் றிருக்குமக் கோயில். (கஅ)

இத்தளி யதனு ளீசமா திரத்தி லெறுழ்வலிச் சூலைநோய் தீர்த்த, வுத்தம தீர்த்தங் கூபநீர் வடிவா யுள்ளதொன் றதனையா ருரைப்பார், பொத்திய மலநோய் தீர்த்திடும் வாய்மை புலனுறக் காண்பரி தேனு, மெத்திற நோயு முழுந்தமிழ் புனலா லிரித்தனேர் காணலா மின்றும். (கசு)

பரவுமிக் கோயிற் புறத்தபி முகமாம் பச்சிம துவாரத்தின் வலப்பாற், றிருமடந் திலக வதிமட மெனும்பேர் திகழ்வுற வுலகெலாஞ் சிறக்கு, மருவரு ளுருவா கீசர்க்குத் திலகவதி திரு மந்திர நீற்றே, டருளற னல்கி யருளிட னென்று லன்னதன் மகிமையா ரறைவார். (உ0)

திருமட மிதன்பா லொருவடம் வடபாற் றிகழுமீ தருபறைச் சிரமோ, வெருமடங் கடிந்தோ ருள்ளமோ சுத்த வித்தியா நிலயமோ பரம, குருமணி யெல்லாம் வல்லமா சித்த குலமணி வீற்றிருந் தருளு,மருமணி யதன்பாற் சனகர்முன் னுய வருட்சிவ சித்தராங் கமர்வார். (உக)

அன்னமா சித்தர் தருதிரு வருள்வேட் டளவிலாச் சித்தர்வா தமர்வா, ரிங்கிழ லிறைவ னடிநிழ லென்பார் யாந்திருக் கை

லகின் றேகு, நன்னெறி மலயக் கிடையிளேப் பாற்று நறு
கிழ வீதென நயப்பார், துன்னியிவ் வகைபல் சித்தர்கள்
சூழத் துணையிலவ் வடதருத் துலங்கும். (உஉ)

மரபித ஞலித் திருநகர் சித்த வடமெனும்பெயர்பெறு மாலு,
மரியிடு வனத்திற் பிருந்தையென் படலே யதிற்புரள் பெரு
மய றவிர்ப்பான், றிருவுமை யடிதாழ்ந் தருச்சனே செயமா
தேவன்மா தேவியோ டவட்குப், பிரசன்ன மாகி மான்ம
ணந் தரலாற் பிரசன்ன விலக்குமி புரமாம். (உங)

இத்தகு சித்த வடப்பெருந் தலமிவ் விருகிலச் சேமவைப்
பாமிவ், வுத்தம நாம முளைப்பினு முதவு முன்னரும் பன்
னல மென்ருற், பத்தியின் வசிப்பார் பலனெவ ருளைப்பார்
பரனம ரத்திருத் தளிநேர், வைத்தமா மறுகி ஞதிசை வப்
பேர் மறைகுலச் செல்வமர் ளிகைகள். (உச)

...ளநால் வருணத் தின்னற நெறிகின் றின்னருண் மன்னு
மா செல்வ, மேனிறை குடிகள் செறிமறு காதி விழுப்பொ
ருட் பெருக்கினின் விளேவை, யானுளா செயுமா றெங்ங
னஞ் சிறியே னியற்பெரும் புலவர்க்கு மரிதே, ஞனில முய
ப்போந் தருளும்வா கீசர் நலஞ்சிறி தறிந்தவா நவில்வேன்.

சித்தவடச்சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். எடு.

---

## வாகீசச்சருக்கம்.

திருவார் கைலை மால்வரையிற் றிகழு மபர சிவனுக, வரு ளே யுருவா யமர்ந்தோர்பாங் கருநான் மறைகண் மந்தணங் கள்,சிரமாண் பொருள்களவைவடித்துத்தெளிக்குஞ் சைவ சித்தாந்தப், பெருமாண் டொகைநூல் வகைவிரிநூற் பெரு மை யாதி யெல்லாமும். (க)

அன்பு பெருகப் பன்முறைவேட் டடிதாழ்ந் திறைஞ்சும் பெருமுனிவர், முன்பு மலர முகமகழ் மொழியு மலர வெ டுத்தோதித், தன்பொ னருளாற் சீவன்முத்தத் தனிமெய்ஞ் ஞான சிவயோகி, யின்ப முறவீற் றிருந்தருளு மெல்லா வுலகு மீடேற. (உ)

இம்மா முனிவன் றிருப்பெயர்வா கீச முனியென் றெவ்வு லகு, மெம்மா தவரு மகாமநுவென் றியம்பித் துதிக்கு மிய ற்றுமா, லம்மா முனிவர் பெருமானு ரனைய திருமா மலையின் கட்,டம்மா தரவாற் சிவநியமத் தலைநின் றொழுகிச்சாருநாள்.

ஆழி சூழு மிலங்கைநகர்க் கதிப னவுணர் பற்பலரும், வாழி வாழி யெனநாளும் வணங்கிக் குறிப்பின் வழியொழுக,வேழு தலமு மாணைசெல வெதிரொன் றிலாத வரசியற்றுஞ்,சூழு மவன்சீர் வான்மீகி சொல்லான் வல்லா னல்லோமே. (ச)

வடமா மறையை வடித்ததமிழ் மறையு மிலக்கத் திராயிர மாந், திடனுர் பதிகந் தொறுமிவன்பேர் திகழ வுரைக்கும்

பெரும்பாலுங், தடமீ தலது மீசுரப்பேர் சாற்று மிவன்பே
ரீற்றிலமைத், துடனு வுமைப்ப வெனிலெளிதோ வுவன்சீ
ரளக்குந் திறனம்ம. (ரு)

நிகரி லாற்ற லளப்பில்பல நிதியின் பெருக்க முதலெவற்றுந்,
திகழு மிதுபோற் பலகலையின் றேர்ச்சி திருநான் மறைபல'
காற், பகரு முணர்ச்சி யிவற்றினுமா பதியே பதிநா மடிமை
யெனத், தகவோர்ந் துறைத்த லப்பரமன் றூட்கே பொது
நீத் துறும்பத்தி. (சு)

இதனு லவன்ற னருட்குறிக்காற் றிடைய ருத சிவபூசை,
முதலாம் புனித சிவநியம முழுது முடையோ னிவனுளத்
தன், பதனுற் சிவமே யருளுருக்கொண் டகில சீவ தயாநிதி
யாய்ப், பதமே தரவீற் றிருந்தருளும் பரம சிவமா தலமை
வைக்கும். (எ)

கானே ருயிரா யண்டமெலாந் தன்பே ரொளியால் விளக்கு
வதா, யானு திலகும் பெருஞ்சிறப்பிற் றுமென் றருமைத்
திருக்கைலே, மேனேர் காதல் பிடித்தீர்ப்ப வேட்கை வசனு
யூக்கமுடன், போனுன் றிருமு னுங்கமலன் பொற்றுள்
வணங்கப் பெற்றுனல். (அ)

பெற்றங்கடவும் பரமனருள் பெற்றங் கரிதிற் பிரிந்தனைய
விற்றங் கமல மலேவளங்கள் விரிபல் விடங்க டொறுந்தோறு
முற்றங் களனு ரருள்காட்ட வுள்ளத் துவகைவெள்ள முறக்
குற்றங் கடியும் பேரன்பாற் குறித்து நோக்கி வருகின்றுன்.

## வேறு.

நாற்பது கோடி யோச னைத்தித னுயர மென்ப
பாற்பகு மிருபான் கோடி பரவுமிவ் வகல மென்ப
வேற்பதோ வம்ம பன்னு ளெண்ணினு மினைய வெற்பின்
மேற்பொலி சிகர வீட்ட விளக்கமு மளக்கொ ணாவே. (கo)

எனநினைந் திறும்பூ தெய்தி யிவ்வரை யுச்சி யின்க
ணனகமா யொருபான் கோடி யளவையோ சனையுயர்ச்சி [த்
யினின்மனைப் பொருட்டா காரத் தியைந்தொளிர் பதுமராக
தனிமணி மயமா யாங்கோர் சிருங்கமன் றயங்கல் கண்டான்.

அன்னத னுச்சி யின்னோர் கோடியோ சனைய கன்றே,யின்னு
யிர் போன்றி லங்கு மெழிற்றிருச் செம்பொற் கோயில், பொ
ன்னின்மா மதில்க ளொன்பான் புனைமணி யினத்தொவ்வொ
ன்ரு, னன்னரா வரண மொன்பா னூற்றிசைக் கோபுரங்கள்.

ஆவர ணங்க ளாதி யகவிட வகையி னைங்கைத், தேவினரு
சேய்முன் னோர்தஞ் செறிபரி வார மாதி, மேவியற் சிறப்பி
னேடு வீற்றிருந் தருளு மேன்மை, மாவெழின் மணிப்பொற்
கோயில் வகையெலா மிலங்கக் கண்டான். (கங)

அரியய னாதி வானோ ரவலமின் றியலு மாதம், புரிதொ
ழின் முறைசொற் றெம்மான் பொன்னருள் பெறவுட் செ
ல்வா, னிரைநிரை நமந்து வேண்ட நேர்தரா தரந்தெரிந்து,
மரபினுட் புகுத்து நந்தி மண்டப மகிமை கண்டான். (கச)

வரவும்போக்குடைய சீவ வகையுண்பா லயன்முன் னோர்தம்
பொருகொடி யினத்து ளேறு புகழ்க்கொடியரசாம்வாய்மை
தெருளடை யில்பே ராலுந் தேற்றுசீ ரோற்று நாமத், தொரு
டணித் துசமக் கோயி லொளிர்திரு முன்றில் கண்டான்.

மணிமயத் தளவாத் தம்ப மண்டப வகைக ளோர்பா, லணி
யணி முனிவர் கூட்டத் தரவொலி யொருபா லேந்தென், றெ
ணிவிரி கருவி யீட்டத் தின்னிசை யொருபா னூலிற், கணி
தரு மியமீ ரோன்பான் கணையொலி யொருபாற் கண்டான்.

உருத்திர மகளி ராட லொத்திசை பாட லோர்பாற், பெரு
த்தெழு நெருக்கொ துக்கும் பிரம்பொலி யொருபாற் றெ
ய்வ, கிருத்திம சால மன்ன கிளர்பெருந் தலைவ ரோர்பாற்,
றிருத்தகு முருத்தி ராதி தேவசா லங்க ளோர்பால். (௧௭)

இவ்வகை போலப் பல்வே றிசைப்பருங் குழாங்க ளாங்க
ணெவ்வொரு பாலிற் சூழ வும்பன்மா முகத்தன் செவ்வே
டெவ்வடு க்காரி வேள்வி சிதைத்தமா வீர ஞதி
திவ்வியர் சந்நி தானத் திருக்குறிப் பருண டாத்த. (௧௮)

அரிமணித் தவசி னெம்மை யாளுடை யீச னோர்பாற்
றிருவரு ளமுதத் திங்கட் டிருமுக மீன நோக்கிற்
புரிபா வ்பரஞானப் புணர்முலை வணர்ம ருங்குற்
கிரிசையீற்றிருப்ப மேவுங்கிள ரருட்கொலுநேர்கண்டான்.

அக்கொலு வீற்றி ருக்கு மணிமணிச் செம்பொற் கோயி,
லெக்கவி பல்லோ ராலு மெண்ணிலாக் கற்ப காலந், தொக்

குனை செயினு மங்கத் தொகுதியு மளக்க லாகாத், தக்க
தொல் சிறப்பிற் றென்னுந் தன்மைகண் டிறும்பூ துற்றான்.

தத்தம வுத்தி யோகத் தனித்தொழி லருளா னீங்கி, மூத்தி
வேட் டயனுர் பல்லோர் முகுந்தர்பற் பலர்மால் பல்லோர்,
வித்தகர் குழாஞ்சூழ்ந் தேத்த விளங்குசண் டேச நாமத், துத்
தமன் மணிப்பொற்கோயிலொளிசெய்வைபவநேர்கண்டான்.

இன்னன பல்சி றப்பி னெம்பிரான் செம்பொற் கோயின்,
மன்னிய சென்னி முன்சொன் மாணிக்க சிருங்க மொன்
றின், றன்னடி முடிமேற் கொண்டு தசைதிசைச் சிகரச்
சூழ, லன்னதன் கீழ தன்கீ ழாய்விரி யளப்பில் சூழல். (உஉ)

ஒன்றினுக் கொன்று கீழ்க்கீ ழொருபதின் மடங்கு மிக்கு,
நின்றுரோர் சூழ லொவ்வோர் நிழன்மணி மயத்த வாகித்,
துன்றெழில் கண்டான் மற்றுந் தொல்சிறப் பெல்லாங் கண்
டான், குன்றிது காணப் பெற்றேன் கோதின்மா தவப்பே
றுற்றேன். (உங)

என்றுனைத் தார்வங் கூர வேத்துமக் கோத்தி ரத்தி
னின்றுசெல் பிரிவாற் றுனைப் நியதியி னுளும் போந்திக்
குன்றக மிறைஞ்சு கென்னுக் குறித்தொரு வாற்றி னேகித்
தன்றனி நகரம் புக்கான் றறுகண்வா ளரக்கர் கோமான். ()

நாடொறு மெண்ணி யாங்கு நண்ணியக் கயிலை போற்றி
நீடுதன் பதியின் மீளு நியதிய னொருநா ளிந்தக்
கோடுயர் வரையி னுளுங் குறுகியா முழுப்ப தென்னே
மாடுறப் பெயர்த்தெ டுத்தெம் வளநகர் வைத்து மென்னு. ()

ஆண்டுளங் துணிந்தா னந்தோ வருளினு ளடங்கி யாதும்
யாண்டுநஞ் செயலி னுகா தென்றுதாழ்ந் துண்மை யோர்ந்து
காண்டகு பெரியர் தாமுங் காட்டிடக் காண்ப ராகிற்
கோண்டறு கண்ண ரக்கன் குறித்தவீ திறம்பூ தாமே. (உகூ)

பருத்தது கொண்ட சால கடங்கட னிருபான் றிண்டோ,
ளுரத்தசைத் திடவவ் வோங்க லுச்சியங் குவட்டுக் கோயி,
லொருத்தன்மெய் யிடத்தெ மன்னை யுலகினிற் பெண்மை
தேற்று, மருத்தியி னஞ்சி னுள்போன் றண்ணலை யணைத்துக்
கொண்டாள். (உஎ)

## வேறு.

அன்ன காலையெம் பிரான்மணித் தவிசமர்ந் தாங்கே
யுன்னு சேவடிப் பெருவிர னுதிசிறி தூன்றத்
தன்ன தோணெரிந் தலறுபு தாழ்வரை யடிக்கீ
ழின்னல் கூர்ந்துரோ தனித்திரா வணப்பெய ரிசைந்தான்.

அரக்க னுண்டழு மொலிதிருச் செவிபுக வாங்கே
புரக்க மாதவர்க் கருணெறி புகன்றுவீற் றிருக்கும்
வரக்க வின்செய் வாகீசமா முனிவர்கோன் மனத்தே
யிரக்க மிக்கெழ விரைந்தெழுந் தெதிரணைந் தியம்பும். (உகூ)

அன்னை யாயரு ளத்தன்மெய் யன்பினு லருச்சித்
தென்னை வேண்டினும் வேண்டியாங் கீயுமவ் வியனின்
றுன்னல் பெற்றுவந் திடாமையிங் கடாமைசெய் தொடங்கி
யின்ன லுற்றனை பேதைநீ யாதலி னென்றே, (நுO)

அங்க ணஞ்சலே யென்றருட் செஞ்சொலே யருளி
யிங்க ணின்செயல் பெரிதப சாரமே யிதனே
வெங்க ணஞ்சணி மிடற்றவன் பொறுத்தருள் விதமோ:
துங்க நன்செய லுரைத்துமீ தருத்தியிற் றனேந்தே. (நட)

செய்யி னின்னிடர் நையுமா லேயிரு சிரத்தோய்
துய்ய சாமகா னப்பிரி யன்னெனுஞ் சுருதி
செய்ய வேணியெம் மானேயப் பணிநடாய்த் திகழ்ந்தே
யுய்தி யென்றரு ளுபாயமாங் குரைப்பவவ் வுரவோன்.(நஉ)

அதுவி னுவின னலக்கண்முற் றகன்றென மகிழ்ந்தான்
குதுக லித்தன னப்பெரு முனிவர்தங் கோனேத்
துதிபு கன்றன னெந்தைநின் றாயபே ரருளுக்
கெதிரெ வன்கொலோ வேழையே னியற்றுவ தென்றான்.()

ஞான மாமுனி யெம்பிரா னவின்றவா சாம
கான முற்றெழு கருவிவே றின்மையிற் கவன்றே
யான தன்னெரு கைவள நைவளமாக
மான தன்றலே யதன்றலேப் பத்தரா வயங்க. (நச)

தந்து சாங்கமா மவ்விரு தகுமுறுப் புபாங்க
மெனமு னெஞ்சமுந் துணிபுறத் துணிபுற விறுத்தாங்
கனேய வீணையிற் சாமவே தத்தினே யமைத்தே
யெனேய ருள்ளமு நனிகனி தனியிசை யெடுத்தான். (நரு)

அன்ன வின்னிசை யிரக்கமிக் கெழுமொலி யாங்க
ணென்னே யாளுடை நாயகன் றிருச்செவி யிடைப்போந்

தென்ன வின்சுவை தானும்வேம் பெனவினித் தீர்ப்ப
வுன்னி மாசலை யுடன்விடை யிடையெழுந் தற்றான். (௩௬)

எதிரெ ழுந்தரு டோற்றங்கண் டிரக்கமிக் கரக்கன்
முதிரு மன்பனாய் வன்புறு தன்பிழை முன்னாத்
துதிபு கன்றனன் பன்முறை முன்முறை தொழுதான்
கதிநின் பொன்னடி யன்றியொன் றின்றெனக் கரைந்தான்.

ஐய வேழையேன் பிழைபொறுத் தருள்கிலை யானா
லுய்ய நாயினேற் கோர்புக லுண்டுகொ லுனையன்
றெய்யி லாமைநின் னிடத்துமிப் பெரும்பிழை யிழைத்தே
னையு மென்னையும் புரத்திகொ லெனப்பினு நமந்தான். ( )

அடிய டைந்தவர் பிழைதிரு வுளங்கொளா தவர்க்கே
கடிதி னன்றருள் கருணையங் கடற்றனிக் கடவு
ளொடிவில் வென்றியொள் வாளுமன் னுலப்பில்வா ணாளு
நெடிது நல்குபு செல்கென விடுத்துப்பின் னிமலன். (௩௯)

அரக்க னாற்றலி னாற்றப சாரநோக் காமை
யிரக்க மிக்குயு முபாயமீங் கிசைத்தவித் தோடங்
கரக்க மானுட னாகென முனிவர்க்குக் கழறப்
புரக்கு மன்னையெம் மண்ணலை நமந்திது புகலும். (௪0)

அகில சிவகா ருணியமா மூர்த்தியென் றருணால்
புகல நின்றருள் புண்ணிய வென்னையிப் புதுமை
பகவ நின்னிகர் பண்ணவன் பரிந்துள மிரங்கி
மிகவு யிர்க்கரு ணன்மையா புன்மையா விளையும். (௪௧)

இனைய நன்மைமகின் றிருவுளப் பாங்கிலை யென்று
லெனைய நுண்மைதேர்ந் துய்குந ரெனினுமெம் பெருமான்
புனைம ணிக்கலைச் சிற்றிடைப் பொற்றொடிப் பூங்கை
வனைம லர்க்குழன் மலைக்கொடி வினவிடை வழங்கும். ()

மாது கேண்மதி யினியதே நின்வின மனுட
னூதி யென்றது நன்னிலை யின்னரு ளதனை
யேத மென்னநீ முன்னலை பன்னல னீட்டு
சாத கம்முல கெவைக்குமீ தெனப்பினுஞ் சாற்றும். (சங)

## வேறு.

பொய்தரு மதங்கள் கலிவலி யதனாற் புவியுற விரிந்தவிப் போழ்தெம், வைதிக சைவ நிகமவா கமநூல் வழிநிறீஇ யுயிர்க்கருள் வழங்கப், பொய்தெறு மனைய வாய்மைநூற் சாரபூதமாந் தென்மொழி வேத, முய்தர வெளியிட் டருளிய வெமைநே ரொருவனப் புவிக்குற வேண்டும். (சச)

அத்தொழில் வல்லோ னித்தவ னிவனை யகாரணத் தவனியுய்த் திடின, முத்தம நெறிநின் றருள்பெறீஇக் கைலை யுற்றுமென் முற்றுணர் முனியு, மித்தனை யிழியி னெனவிபரீதத் தெண்ணுபு மண்ணவர் முதலோர், முத்திநன் மார்க்க விமுகரா குவரான் மொய்குழா லனையது குறித்தும். (சரு)

தூயருக் கியற்று நலமிக பரத்துந் துணையலா லுணைவிலாக் கொடிய, தீயருக் கியற்றி னோர்க்குமன் னிடரே சேர்க்குமென் றோர்க்குதல் குறித்து,நேயநம் முருவன் பழுதொரு

பொழுது நெஞ்சினும் புகப்பெரு நிமல, ஞயமா முனியைக் காரணம் புணர்த்தி யவனியுய்த் திடவுளந் துணிந்தேம். ()

நதலர் லிவன்பாற் கோதுள தாக வெண்ணிநா முனிந்தன மென்னு, மாதராய் நினேயே லன்றியு மிருவர் மணுள னு மணு ட்டியு நெடுநாட், காதலான் ஞான காதலற் பெறுமா கருதி மா தவம்புரிந் தனரிப், போதக னமர்ந்திப் போதகன் பல ணுப் போதகப் போதக மலர்ந்தாம். (சுஎ)

என்றமை யாளும் வென்றிமால் விடையோ னெமாசலே யிமாசலேயுவப்ப, நன்றுரைத் திடனு யெழுந்தரு ளமைய நமந்தடி சுமந்தரு டலேக்கொண், டென்றுநம் பெருமா னரு ட்டுணேயுள தென்றிருந்தவத் திருந்தவவ்விருவர்க்,கன்றருண் மகவாப்போ தவம்முனியெம்மண்ணலாருண்ணயந்தனரால்.

அதுதிருவுளங்கொண் டின்னினிநாமிவ்வருந்தவப் பெருந்த கைக் குடனின், றிதமுமு தளித்து மென்றுல களித்தா ளிம கிரி சுதைதிரு வாமூர், முதுநக ரிடைப்பே ரருளுரு வாகிமு ன்புகுந்தனள்கொலென் றுன்ரேர், துதிசெய முனஞ்சொ லிருவர்பா லாங்கோர் தூயபெண் கொடியவ தரித்தாள். ()

கடமதி கேட்டை நாளிலங் குறத்தாங் களிக்கடல் குளிக்க வாய்த் திளவத், தடமதி முகப்பெண் கொடிக்குறு விதியாற் சாதகன் மாதிகண் ஞான, வடமதிற் பரம குரவனு முக்கண் வள்ளல்பே ரருளினே வழுத்தித், திடமதித் தாதையார் கிளே சூழச் செயல்வகை வியல்வகை செய்யா. (ரு0)

தங்குல திலக ஞானமெய்த் திலகந் தனிச்சிவ யோகமா திலகம், பொங்கருட் கிரியா திலகமாண் சரியை புரிநுதற் றிலகம்வான் சைவ, மங்கல திலக மாதவ திலக மாதியென் றேதியல் வயங்கந், நங்கையைத் திலக வதியெனு நாம நவின்றினி துவந்துள நயந்தார். (ருக)

விண்மணி நோக்கித் தழலிடை யுறன்முன் விளைத்தமுற் றவத்தினாற் றங்கள், கண்மணி யென்னத் தோன்றியெவ் வுயிர்க்குங் கதிமணி விளக்கமாய்த் திகழுப், பெண்மணி தனைப் பெற்றின்புறு மவர்பல் பெருமணி யாரமுன் னுய, வொண்மணிக் கலன்கள் பூட்டியாட் டுெபுதம் முயிர்மணி யாவளர்த் துவப்பார். (ருஉ)

## வேறு.

பெறலருமைப் பொருளெளிதிற் பெற்றாராய் முற்றேகை
நிறைகடலிற் றிளைத்தாரந் நேரிழையைப் பெறுதவத்தோர்
திறையிடுவார் திருமுதலோர் திருந்தெழிற்கென் றருள்விளக்க
முறையெதிர்கண் டதிசயித்தார் மூதுணரு மாதவத்தோர்.

இப்படியா லிப்படியுய்ந் திடத்தோன்றிப் பாவையார்
துப்படியா லணியுகைத்துச் சுடர்மணிப்பூண் முடியெடுத்தே
மப்படிய வுதைத்தருளே மலர்க்கரத்தா லெமையெடுப்ப
தெப்படியு மெனத்தேற்றி யிலங்கணைமீக் கிடந்தருள்வார்.

அணையின்மிசைக் கிடந்துதவழ்ந்தடித்தளிர்கன்றிடநோக்கின்
றிணைமலர்மென் கரம்பற்றி யெதிர்தருவா ருடனடந்து
துணையடிக டளர்வொழியத் துணைவேண்டா நடந்தோடிப்
பணைமகளி ருடனுடல் பயில்பருவத் தியலுறுவார். (௫௫)

இம்முறையா லாண்டுசில வெய்தவளர்ந் தினமடவார்
தம்முடன்மா மனைமுன்றிற் றனிமறுகின் மணிபலகொண்
டெம்முடையான் றிருக்கோயி லிலிங்கதா பனமாதி
யம்முறையாற் செய்தெவர்க்கு மகமகிழ்ச்சி மிகவிளைப்பார்.

சிறுவீடு பயில்பருவச் செயலதனிற் றிருவருளா
லுறுவீடு தரப்போந்த வொண்டொடியார் சிறுசோறு
மறுவீடு நிவேதனமா மலர்புனைந்தேத் துபுபாசந்
தெறுவீடு பசுத்துவந்தீர் சிவத்துஞ்சார் செயறெரிப்பார்.

இளம்பருவத் திவரிவ்வா றெவ்வெவரு மிறும்பூதி
னுளம்பரவ நாணாளு முதுபோலற் புதமாக
விளம்பருட்பல் செயல்விளைய விளையாடி வளையாடும்
வளம்பயின்மென் மலர்க்கரத்தார் வளர்கின்றார் புவிவாழ.

திலகவதி யார்பிறந்து சிலமுறையாண் டகன்றதற்பி
னுலகமெலா முயவருளா லுளமுனங்கொள் வாகீச
குலமுனிவ ரவர்க்கிளையார் கொடியபுல னெறிக்கிளையார்
மலவினையைத் தெறற்கிளையார் மறுமதம்பாற் றிடற்கிளையார்.

சுத்தாத்து விதசைவத் தொன்னெறியா நன்னெறியே
நத்தாகின் றுலகுய்ய நாட்டுதிரு வருள்வலிபெற்

றெத்தாலு மிளையாரென் றெவ்வுலகுங் கொண்டாட
வத்தாய்தந் தையர்களிப்ப வருண்மகவா யவதரித்தார். (௬0)

மீனமதி யுரோகிணிநாள் விளக்கமுற வளக்கரிய
வானமதி முடிவேணி வள்ளறிரு வருளேயென்
றீனமதி யுடையாரு மிலகருணோர் கண்டுலகு
ஞானமதி கரித்துய்ய நண்ணியதிம் மகவென்றார். (௬௧)

பார்த்தளவே யெத்தகைய பாமரருந் தாமகந்தேர்ந்
தீர்த்தமதி யினராகி யெழினயமுன் மொழிநயமுங்
கார்த்தமிடற் றரனருள்கூர் களிநயமு மொளிநயமு
மோர்த்தகுல வலநயமு மெல்லாங்கண் டதிசயித்தார்.

இவர்செயலே யிவையாகி லேதில்பல மாதவத்தோர்
தவமுனள வில்லனசெய் தனித்தாயர் தாதையார்
ருவகைவகை யெவரேனு முள்ளபடி விள்ளரிதே
யெவ்வகையறி வொருசிறிதி லேழையெடுத் திசைப்பதுவே.

ஆனாலு நகைவெட்க மறியாதென் பதுவிளங்க
வானோருந் துதிபுலமை மாண்புடையார் கழல்வணங்கி
யானோதத் துணிந்தனனிவ் விளங்கோலப் பெருந்தகையை
மேனாளி னருந்தவத்தான் மிளிர்மகவாப் பெறுதவத்தோர்.

நாமுயநங் குலமுய்ய நகருய்ய நாடுய்ய
வாமுலகெ லாமுய்ய வரியதிரு வருளுருவாய்க்
காமுறுமா தரமுடிப்பான் காதலனாய்ப் போதலினா
லேமுறநாம் பெறவினியெ னென்றின்பக் கடற்றிளைத்தார்.()

திருவவதா ரத்தருமைச் செயல்வகைக டினந்தோறும்
பொருவரிய வுருத்தோற்றம் போன்றிலங்க வான்றவிதி
மரபினடாய் வருதாதை வழுத்துதிரு மகனுருக்
கரியதிருச் சாதகன்ம மாதிகண்மே தகப்புரிந்தார். (௬௬)

அருணோக்கி யுலகமெலா மயனெறிநீத் தியனெறியாந்
தெருணோக்கு தனிச்சைவத் திறனெறியே யறனெறியென்
பொருணோக்கியுய்த்தடைசெய் பொய்வழிப்பு காதெவர்க்கு
மருணீக்க வந்தமையின் மருணீக்கி யாரென்றே. (௬௭)

நாமகர ணத்தழகு நாள்பெறநல் லோரையெழ
வாமுறைசெய் தழைத்துவகை யார்கலியிற் றிளைத்தனரத்
தோமிறிருத் தாதையார் தூயபுகழ்ச் சிறப்பெல்லா
மேமுறுமா நினைந்துநினைந் திறும்பூதுற் றுலகரெலாம். ()

நேரிலருந் தவப்புகழு நிறையருளே மகவாகப்
பாரில்வரப் பெறுபுகழும் பன்னிதிய நிறைபுகழுஞ்
சேரவருள் கொடைப்புகழுஞ் செப்பரும்பன் னடைப்புகழு
மாருமடை வருமினிய வளப்பில்புக ழெல்லாமும். (௬௯)

ஏனோர்போற் றமைப்புகழ்வா னீட்டாமே யியல்பானே
யானுமெய்ந் நிலைகுறித்தே யவைசிறப்ப வவரையடுத்
தேநாளும் வளர்செயலா லிடுகுறியா யவர்தம்மை
வானேறு புகழனா ரெனவழுத்தி வாழ்த்தினரால். (௭௦)

மேதினிமே லதுதானே விளங்குதிருப் பெயராய
தோதிலா மவர்மனையா யுலகமுய மகப்பெற்ற
பாதிலா நறுநுதலப் பாவையார் தமைப்போல
மாதினியா ரெனப்பரவி வழுத்தின ருடனுங்கே. (௭௧)

அதுதானே திருப்பெயரா யவர்க்குமியைந் தஃதென்றும்
பொதுவாடு பதம்விழைந்தே புகழனார் மாதினியார் [த்தோ
நிதமோவாக் கொடைவகையி னினைப்பரும்பல் செயல்குறி
த்திநீடு மவர்குலம்வே ளாண்குலமென் ருவர்தூயோர். (

செல்வமுத லெண்வகைய திருவேதா கமாதிதிரு
வில்வளர்கல் வித்திருமெய்ம் மிளிர்ஞான யோகதிரு
பல்வகைய பசுபாச பதிதன்மத் திருமுதலாத் [ன்றும்.
தொல்வகைப்பஃ றிருவெல்லாந் துதைந்துநிறைந் தெஞ்ஞா

காலமறு தலைகளினோர் காலும்வே றுருதுவளர்
கோலமலி பெருஞ்சீர்த்தி குறித்தோவப் பெரியவர்வாழ்
ஞாலமலி பல்வளஞ்சார் நகர்திருவா மூரென்றே
சீலமலி பேருலகோர் செப்புவரா விப்புவிமேல். (எச)

இன்னதனித் திருவாமூ ரினில்வேளாண் குலம்வாழ
மன்னுதிருப் புகழனார் மாதினியா ரிருவோரு
முன்னரும்புத் திரமணியை யுலகருளுங் குலமணியைப்
பன்னரிய சீராட்டிற் பாராட்டி வளர்க்கின்றார். (எரு)

பார்திகழ்மெல் லணைநீலப் பட்டின்மிசைத் திருமேனி
யோர்திகழக் கரமூன்றி யெம்மையரு ளம்மதலை [டுத்துச்
யார்திகழ்தாண் மடித்தொன்றோன் றணையுதைத்து முடியெ
சீர்திகழ்மா முகமசையச் செங்கீரை யாடுவார். (எசு)

சாற்றுமதின் மண்ணாதி தத்துவநீத் திருண்மலமும்
பாற்றுமெ யன்போங்கப் பரவருள்கை வருமாகா

வேற்றுநெறி யெனவெமக்கு விளக்குதிரு வருட்செயலின்
றோற்றமெனக் கண்டுவப்பார் தூயதபோ தனரெவரும். ()

மாதினியார் மடிக்கிடத்தி மணியேயம் மணியொளியே
யேதமிலா மாதவமே யிருந்தவத்தி னருந்தனமே
காதறரு மெம்முயிரே கண்வளரா யென்றென்றே
யாதரவிற் றாலாட்ட வருண்மலர்க்கண் டுயின்றமர்வார். ()

செய்யகணைக் காற்றாய திசைகமழு நறுந்தைல
மெய்விரவக் கிடத்துபுநீர் விரையாட்டி யொற்றாடை
யொய்யெனவிட் டவிர்சுண்ணத் தொடுகுறங்கிற்கண்டுயிற்றித்
தெய்வமணித் தொட்டிலினிற் றிருக்கரத்தா லாட்டுவரால்.

கண்ணேயக் கண்மணியே கண்மணியிற் கதிர்பாவாய்
விண்ணேடி னுங்கிடையா மெய்ப்பொருளே திப்பியமே
யுண்ணாத வாரமுதே யுறுசுவையே கண்வளரா
யண்ணாலென் றன்னையர்தா லாட்டுசுகோ ததிதிளைப்பார். ()

எழுபிறப்பும் பெறுமவற்று ளெனுங்குறள்கட் கிலக்கியமாய்
முழுதளித்தெங் குலமணியே முதமதியே சுதநிதியே
பொழுதுதிக்கு மிளங்கதிரே பொலஞ்சுடரே யெனக்காமுற்
றெழுதுதிக்கும் புகழுன ரெடுத்தணைததின் புற்றமர்வார். ()

இலங்கணையி னிளங்கோலத்தெமையளிக்கும்பெருந்தகையா
விலங்குறமார்புந்துபுமென்மெலத்தவழ்ந்துநலத்தகைய [ர்
தலங்களின்மே லாங்கயிலே சார்வரிதே னையர்க்கென்று
புலங்கொளுவ வுந்தியும்பின் போதுமருஞ் செயறெரிப்பார்.

நம்மையரு ளெம்மகனார் நடையாரம் பித்தருளுஞ்
செம்மைதிகழ் சந்திமிதித் திடுசெயனா லாமதியிற்
றம்மருள்பெற் றுலகுய்யச் சமட்டிதிரு வடிதீக்கை
யிம்மகியிற் புரிதலென வின்புறச்செய் துளங்களித்தார். ()

துப்பாணி முத்தேயெந் தொல்குலமா தவப்பயனே
யப்பாணி வேணியனன் பள்ளியருள் வள்ளாலிங்
கெப்பாணி யிசைகளுமு னிளம்பாணி யிசையொவ்வா
சப்பாணி கொட்டுகெனத் தாம்பாணி யாதருள்வார். (௮௪)

கருவாயினுலகுலையாக் கதிவாய்ப்பத் துதிவாய்மைக்
குருவாயின் னருட்கோலக் குழவாய குலமணிநின்
றிருவாய்முத் தேயருண்மெய்ச்சிவம்வாய்ப்பதுடனெமக்குத்
தருவாயென் பார்க்குவந்து தனிவாய்முத் தினிதருள்வார். ()

திருவணையிற் கிடந்திருந்து திருத்தமுறத் தவழ்ந்தசெய
லொருவுறத்தம் முதுகுரவ ருடன்மடவார் பலர்வேண்ட
வருமுறைவை திகசைவ மனைத்துலகி னிலைநிறுவ
வருமகனார் செந்நின்று மற்றவர்க்கு மகிழ்வளித்தார். (௮௫)

அவனிமிசைக் கொல்லாமை யாகுமறம் வெளிக்காட்டிக்
குவிகொலைமா ரணவேள்வி குயிற்றியுஞ்செய் சமணர்நெறி
துவரவழித் திடுசெயலிற் றொடங்கவடி யெடுத்தாங்குத்
திவியமல ரடியெடுத்துச் சென்றருளு நடைபயில்வார். ()

போரானை யுரிபோர்க்கும் புறத்தானை யறத்தானை
யேரானை யிவர்வானை யெம்மானை யம்மானைப்

பேரானை யிடப்பாலெம் பெருமானை யுருகார்முன்
வாரானைத் தருவானை வாரானை விழைந்தழைப்பார். (௮௮)

வேறு.

குருந்தே வருக வெமதுதவக் கொழுந்தே வருக வரும்பெற ல்வான், மருந்தே வருக வெங்கள்குல மணியே வருக மலர்ந யன, விருந்தே வருக வானந்த விளைவே வருகென் புகழுனர், முருந்தோர்நகைமாதினியார்க்குமுதமிக்கிதவற்புதமளிப்பார்.

வருமம் புலிபாம் பிறைஞ்சமணி மன்றி னடஞ்செய் வள்ள லைமுற், கருமம் புலினீ ரெனுமாயக் கடல்வீழ்த் தாமே கை யெடுத்துத், தருமம் புலிநா முயக்காட்ட றகையமலர்க்கை வானீட்டி, மருமம் புலிவா வெனவழைத்து மகளிர் களிப்ப மகிழ்வளிப்பார். (௯0)

பின்னு ளருகன் பாழிகளும் பேதை யமணர் பள்ளிகளு, மன் னுதழித றம்மாலே வயங்கத் தெரித்தாங் கணிமறுகின், மின் னார் மணிகொண் டிளமகளிர் விளக்குஞ் சிறுவீ ட்டிமலர்க, ளன்னே துகண்மே வுறவழிப்பா ரடியே னகத்துந் துகளொ ழிப்பார். (௯௧)

வேத முழக்குஞ் சிவாகமத்தின் விமல முழக்குந் தனிச்சைவ போத முழக்குஞ் சரியாதி புனித முழக்குஞ் சிவஞான, சீத முழக்கு மேனையவுஞ் செழித்து முழங்கச் சிறுபறையி, னாத முழக்குஞ்செயல்விளைப்பார்நடலைமுழக்குநமக்கொழிப்பார்.

பெறுபே றுவக்கு மதிவேணிப் பிரானே பதியப் பிரான்சைவத், துறுதே நெறியே நெறியெனத்தேர்ந் துய்வா னுலகமுவலேமதச், சிறுதே ருருட்டிச் சிவஞானத் தெளிதே ரளிப்பார் சிறுரொடுபொற், சிறுதே ருருட்டி மறுகினிற்பல் றிண்டே ரோதுங்குந் திறம்புரிவார். (௬௫)

சிறுர்பற் பலரோ டேதுமொரு திருவா ருருவிற்றினந்தோறு, மறுதற்புடன்வேண்டுபகரணமலியவயக்கு பூசனையே,வெறுவற் புதநீள் விளையாட்டா விளையவிளைப்பாரீதுலகைப்,பெறுவொப்பருஞ்சைவந்நெறியேபேணப்புகுத்துநிலைபிறக்கும்.

இன்னவகைபல்றிருவிளையாட்டியற்றுமருமைச்செயனோக்கி மன்னு முவகைக் கடல்குளிப்ப மகிழ்மா தினியார் புகழுனர் துன்னு முறவ ருளங்களிப்பத் துகடீர் நகர மிகவியப்பப் பன்ன வரிய விளங்கோலப் படிவக் காட்சிப் பயனளிப்பார்.

குஞ்சி யழகு மணிப்பணிமேற் கோப்பி னழகு நுதற்சுட்டி விஞ்சு மழகும் வெண்ணீற்றின் விமலவழகுமணிக்குதம்பை யெஞ்சி லழகு மைம்படைப்பூ ணிலங்கு மழகுமேனையணிப் புஞ்ச வழகு மஞ்சீரப் பொலிவினழகு மலிவெய்த. (௬௬)

செய்ய மேனிப் பேரொளியுஞ் செறிபல் லணியின் சீரொளியு, முய்ய வருமெண் டிசைவிளங்க வொவ்வோர் மனைக்குந் திருமகவாத், தெய்வ மகிழ்விற் சிவப்பூரத் திகழ்சீ ரடியாற் சென்றுசென்றெம், மையன் விளையா டற்புதச்சீ ரடியே னளவோ வரிதெவர்க்கும். (௬௭)

அருண்மா மகனார்க் கிவ்வாறைந் தாண்டு நிகழப் புகழனா
ரிருண்மா சிரித்து ஞானவொளி யெழுப்பி யிதய கமல முகிழ்
சுருண்மா தளங்கண் மலர்விக்குந் தூய கலைக ளுணர்தருமா
தெருண்மா வித்தியாரம்பஞ்செய்வித்தார்நற்றினம்வாய்ப்ப.

குருவாண் முகத்தா லலதெதுவுங் கொளன்மாண் பலவென்
விதியெவர்க்குந், தருவான் பொதுவென் றுலகுணர்வான்
றருநூ லெவைக்குஞ் சனகமென, வருமாண் புளவெம் மடி
களெதிர் வழங்குங் குருவு மிகவியப்ப, வொருகா லுணர்த்து
முனமெவையு மொருங்கே யுணர்முற் செயறெரிப்பார். ()

உயிரைந் தெழுத்தா லுருத்திரமே யுதனா னடுக்காண் டம்
மிதனாற், செயிரில் காண்ட மிருமூன்றிச் சிறப்பா லெசுர்மா
மறையிதனான், மயர்வின் முன்பின் மறைபோலிவ் வரன்மா
மகவான் முதுகுரவ, ருயர்தங் குலமூர் நாடவ்னி யொளி
பெற்றனவென் றுலகுவப்ப. (௧00)

உலகீடேற விளங்கோலத் தொருவா வருளா லுதித்தருளிக்
குலமா மகனார் சிவஞானக் குறையா மதியா வளர்கின்றார்
நிலவா நின்ற விந்நாளி னிகரி றிலக வதியார்தா
மலகீ ரைந்தாண் டின் பருவத்தமைதிவாய்ப்பநிரம்பினரால்.

இனைய நாளி னொத்தமரபினிலாண்டகையார்கலிப்பகையா,
ரெனுமோர் தலைவ ரப்பெண்மணி யினைமா மணத்தா லெய்
தவிழைந், தனைய புகழ னாரிடைத்தா மரிய முதியர் தமை
விடுப்ப, நினைவி னவர்போந் தவருவந்து நேர்ந்த படிசென்
றுங்குணாத்தார். (௧0௨)

தருமா தினியார் புகழனூர் தமது குலமா மகளாரை, வருமா தரவிற் றமக்குரிய மணஞ்செய் தளிப்ப மனநேர்ந்த, திரு வா சகமக் கலிப்பகையார் செவிவாய் மடுத்தார் களிதிளைத் தா, ரருமா மணஞ்செய் முனமவரை யனிக பதியாக் கொளுமரசன். (கoங)

தனது பகைஞன் வடபுலத்தான் றன்பாற் சமர்வென் றுற விடுப்ப, வனைய வரசன் பணிமேற்கொண் டமரம் புரிந்தங் கவர்நிகழ்நா, ளினிய வருண்மா மகப்பேற்று லெவர்க்குங் கிடையாப் பெருஞ்சிறப்பால், வினையை விடுத்த புகழனூர் மிகமே வியபே ரறப்பயனே. (கoச)

இனியோர் கணமுந் தரியாமே யினிது நுகர்கென் றீசனரு, ளனைய வழைத்தாங் கிவ்வுலகு துறந்து புகுந்தார் மேல்வீட்டின், மனைமா தினியா ருடலுயிர்த மகிழ்ந ரெனவே வாழ்கற்பின், றனிமா மகிமை யுலகமெலாஞ் சாற்றப் பிரிவின் றுடன்சார்ந்தார். (கoரு)

தாதை யாருந் தாயருமித் தரணி யொருவிச் சகமெவைக்குந்
தாதை தாயர் சாம்பசிவ சரண நிழல்வாழ் வுற்றபினர்த்
தாதை யார்பூங் குழலாருந் தம்பி யாருந் தமர்சூழத்
தாதைதாயர்க்கிறுதிவினைச்சடங்குமுழுதமுடங்கமைத்தார்

ஈண்டை நிகழ்வீ தாகமுன மிறைவன் றனக்குற் றுழிவினை மேற், பூண்டு புகுந்த கலிப்பகையார் பொருவில் பெரும் போர்த் துறைவிளைத்தாங், கீண்டு மனிக முருக்குபுமுற்

றிரும்போர் கடக்கு மெல்லேவினே, தூண்ட வுடல்விட்டிசை
யுடம்பு துலங்க நிறுவி வான்புகுந்தார் (கoஎ)

என்னுமாற்றந்திருச்செவியிலேறவுடன்வானேறினர்போன்
மன்னு திலக வதியார வசமா யுலகை மறப்பவவர் [ங்
பின்னர்வேண்டுமுபசாரம்பெரிதும்புரிந்து தெளித்தெனக்கி
கன்னே நீரே யெனவாழ்ந்தே னன்னுய்தெளிதியென்றிரப்ப.

## வேறு.

*தம்பியா ருளராக வேண்டுமென வைத்ததயா
வும்புருல கணேயவுறு நிலேவிலக்க வுயிர்தாங்கி
யம்பொன்மணி நூலுங்கா தணேத்துயிர்க்கு மருடாங்கி
யிம்பர்மனேத் தவம்புரிந்து திலகவதி யாரிருந்தார். (கoசூ)

தம்முன்னு யன்னேயினுந் தாம்பேணு தபோதனியா
ரம்முறையிற் றமக்குரிய வருந்தவங்கள் பலபுரிந்தே
யிம்மைமரு ணீக்கியார்க் கிருந்துணேயா யமர்நாளிற்
செம்மைநெறியுலகுணர்த்தச்சென்றருளப்பெருந்தகையார்.

உலகமெலா நல்லறமே யுயிர்த்துணேயென் றுய்த்துணர்வா
னலகிலரு ளான்முப்பாற் றறமனேத்து முறைபுரிவார்
குலவுசிராத் தாதிகணங் குலத்தரொனும் வாஞ்சையினுற்
பலர்தமர்கட் களித்தன்முதற் பாசவறன் பலபுரிந்தார். ()

வாவிமிகு தடமாதி மலிசுவைநீர் நிலேபுரிதல்
காவளர்த்தல் சென்னெறிகள் காண்டலா மலகாதி
மாவிளா நாவனிழன் மலிவிருக்க மாங்கமைத்த
றேவிருக்கு மறையவர்முற் றிகழ்சீவர்க் கனமளித்தல். ()

விருந்தளித்தல் வாசமுதல் விழைந்தளித்தல் பிணிதீர்க்கு
மருந்தளித்த ருனமெலா மகிழ்ந்தளித்தன் மருதெவையுந்
திருந்தளித்த விருந்தளித்தல் செகமளித்த வனும்வியப்பப்
பரிந்தளித்த விவையாதி பசுதருமம் பலபுரிந்தார். (ககந)

சிவதளிகள் பலபுரிதல் சிரணந்தீர் தரப்புதுக்கல்
சிவகுறிமுன் மூர்த்திபிர திட்டைமகா சாந்திசெயல்
சிவமுணர்மா தவர்வாழுந் திருமடங்கள் பலபுரிதல்
சிவமிகுநூற் கல்விநிறை செயற்குரிய திறம்புரிதல். (ககச)

சிவபூசைச் செயல்யாண்டுந் திகழ்வுறவேண் டுவசெய்தல்
சிவநேசர்க் குபசாரந் திருந்தியசெய் தழைத்தவராச்
சிவமாகப் பூசித்தே திருவமுதா தியவளிக்குஞ்
சிவமாகே சுரபூசைத் திறமிலக முறைவிளைத்தல். (ககரு)

பன்னுமிவை முதலசிவ பதிதருமம் பலபுரிந்தார்
மன்னுறுமிந் நாட்டிலக வதியார்க்கு மடாலயமொன்
றின்னருள்கூர் சித்தவடத் தீசர்திருத் தளிவெளியிற்
சந்நிதிமா மறுகில்வட சார்வடத்தின் சாரமைத்தார். (ககசு)

அன்னதிரு மடத்தென்று மமர்ந்தலரி யெழற்கைந்து
கன்னலென வறன்மூழ்கிக் கண்டிகைநீ றணிந்தலர்கொய்
துன்னுதொடை புனைந்ததிகை யுற்றலகு மெழுக்குமுதன்
மன்னுபணி பலதிலக வதியார்செய் துறுகின்றார். (ககஎ)

இன்னுளெம் மடிகண்மரு ணீக்கியா ரறமெவற்று, முன்னுவ
கொல்லாமை முற்றுயிர்க்கு மிரக்கமிக, லென்னுமுன் னுண

ர்த்திடற்கோ விதுகசப்பென்றுரைத்தலின்வாய்த், துன்றுகா
ண்றிடிற்கொள்ளார் துரிசருமென்றுறத்துணிந்தோ. (ககஅ)

வெவ்வுலகும் பணிகயிலைக் கிறைபிரிவி னூடலினே
தெய்வபர சைவநெறித் திருந்துமலர்ச் சயனமொரீஇ
யுய்வரிய சமணெறியா மூவர்த்தரையிற் கிடைவிழைந்தார்
கவ்வைமிகுந் தூடுதல்பிற் கனியின்பக் குறியன்றே. (ககக)

வேறு.

திருவுளம் விழைந்தாங்காங்குச்செலவமண் குண்டரேற்றுந்
கிருவினர் தருமசேன ரென்றொரு பட்டப் பேர்தந்
தருமைநற் குரவ ராக்கொண் டடிதொழூஉச் செறிந்து சூழ
மருவுமுற் குரவர் யாரும் வழுத்தவீற் றிருந்தா ரந்நாள். ()

தன்னுயிர்த் தலைவி யென்னத் தகுமரு ணீக்கி யாரை
முன்னுறு பிரிவாற் றுமை முளைமதிச் சென்னி யோனு
மின்னுயிர்த் தலைவன் றாதாங் கெய்திய விடுத்தா னென்ன
மன்னுவெஞ் சூலை நோயவ் வள்ளலார் வயிறுற் றன்றே. ()

சூலையாந் தூது குண்டர் துரீஇப்புரி செயலிற் றூழா
மாலைய தாக வேமுன் வைத்தகா லசையா தீசன்
பாலுற்றி கியைபெ லாஞ்செய் பண்பினை மறுக்கொணுமைச்
சிலியா ரிடைத்தம்பாகற்செலுத்தியோர்ந்தாங்கட்செல்வார்.

இங்கிவர் செயலீ தாக விதற்குமு னிவர்த முன்னை
நங்கையா ரதிகை போந்து நற்றொண்டு செயுநா ணர்நின்
றங்கணு வீரட் டேசா வகிலமு மளித்தா ணேசா
செங்கர வேணி யானே திருக்கர வேணி யானே, (கஉங)

எம்பிரா னீயே யாகில் யாங்களின் னடிமை யாகி
லும்பர்நா யகனே யிந்நா ளுய்தியி லமண்சார் புற்ற
தம்பியா ரருள்சேர் வாய்மைச் சைவமா நெறிபுக் குய்வா
னிம்பர்நீ யருளவேண்டுமெனத்துதித்திறைஞ்சிப்போவார்.

வணங்குபு சென்று சித்த வடமடத் தமளி மேவு
மணங்கனுர் கனவிலெம்மா னதிகைவாழ் வீரட்டேசன்
குணங்குறி கடந்தா னேனுங் கோதிலா வன்ப ருட்கோட்
கிணங்குபு பற்பல் வேட மியைந்தெளி யவனுமாவோன். ()

ஒருதிரு முகமு நேமி யொளிவளை மழுமா னக்க
மருவடங் கமண்ட லஞ்சீர் வரதமோ டபயமெட்டு
மிருபுறத் திலகெண் கையு மிடத்துல கீன்றாண் மெய்யும்
பொருவிலா னேற்றின் மீது பொலிதிருக் கோலங்காட்டி.()

மங்கைநீ வருந்த னின்பின் வந்தவன் முனீந்தி ரன்கா
ணிங்குல குய்யப் போந்தா னெமக்கன னியனே யன்றே
னங்கமண் புக்க செய்கை யாருயிர்க் குண்மை தேற்று
மங்கலச் செயலென் றோர்தி வாய்மையீ துவகை கூர்தி. ()

ஆவணி மூல நாளை யனையன்வந் தடுக்கு நின்பாற்
காவரு நீறுபஞ்சாக் கரத்தொடு மளித்துச் சூலை
யோவுநீ ருழவா ரங்கை யுதவிநம் பாலுய்க் கென்றுச்
சேவரு வீரட் டேசன் றிருவுருக் கரந்தான் மன்னோ. ()

வந்தநல் லுருவி னோடம் மாதபோ தனியார்க் காங்கு
வந்தருள் காட்சி சித்த வடத்திருக் கோயி லின்கண்

முந்துமா மூல லிங்க மூர்த்திவாழ் கருப்ப வில்லுண்
முந்துறக் காண லாகு முதமிக வின்று மென்றும். (கஉகூ)

கனவுணர்ந் தருளின் மேன்மை கருதுதோ றன்பு பொங்க
வினிதரு ளேழை யேற்கு மெளியதோ வெனத்து தித்தப்
புனிதையார் நியதி யாவும் போற்றியம் மடத்தி ருந்தார்
பினர்மரு ணீக்கி யார்செல் பெற்றிமேற் பேசு கிற்பாம். ()

பாகனை யூன்றிச் சென்று பகினியார் தம்பா லன்பால்
வாகம ரணைய சித்த வடமடா லயத்தின் பாங்க
ரேகியாங் கவரு முன்ன ரெதிர்வரக் கண்டு தாழ்ந்தார்
சேகுளார் நெறியிற் றீர்ந்தீர் திருவுளீ ரெழுமி னென்னா. ()

முன்னெழு தம்பி யார்த முகத்தொளிர் தரவெண் ணீற்றை
யின்னருண் மணியி னோடைந் தெழுத்திசைத் தினிது நல்கி
யந்நகர்த் தளியுட் கூவத் தவிர்சிவ தீர்த்த முண்பித்
துன்னருஞ் சூலை நீக்கி யுவந்துழ வாரந் தந்தார். (கநஉ)

ஊடினோ ரரிச னாதி யுவந்தணி யாமை போல
நீடுநீ றாதி முன்னர் நீத்தமர் கோலஞ் சைவ
வேடமா யிலங்க நின்றார் மிகுசைவப் பிரவே சந்தான்
பீடுறு சைவ தீக்கைப் பெரும்பேறு பெற்றா லன்றி.(கநந)

எத்துணைச் சிறந்து ளார்க்கு மின்றெனும் விதியை யென்று
மெத்துணை விதியு மேற்கொண் டிவ்வுல குணர்த்தப் போந்த
வுத்தமர் விடுவ ரோவைந் தெழுத்தில குயநோர் பெற்றாங்
குத்தம் சுத்தி தீக்கை யுறுமுறை தெரித்தா ரன்றே. (கநச)

அன்னைநேர் முன்னை யாரவ் வருணிறை தம்பி யார்த
முன்னமண் கோல நீங்கி முழுத்திரு நீற்றுக் கோல
மன்னிமெய்ச் சிவவி ளக்கம் வயங்கருட் பொலிவு கண்டா
ருன்னரு மின்ப வாரி யுட்பர வசரா யுற்றார். (க௱௫)

என்னையாள் வீரட் டேசன் யாதுமோர் வில்லா நாயேன்
றன்னையும் பொருட்படுத்தித்தனித்திவன்றன்மையெல்லாஞ்
சொன்னதென் சொல்கே னிந்தத் தூயன்மாமுனியேநம்மோ
டன்னிய னலனென் றானீ தௌவுபசா ரிகமோ வென்னா. ()

எண்ணினே னெண்ணி னேனை யென்செய்கோ வீச னென்றே
கண்ணினேர் காணப் பெற்றேன் காட்சிமற் றிதன்மே லுண்
டோ, புண்ணிய மென்செய் தேன்முற் பொலிசிவ மயமாம்
பொற்பி, னண்ணலைத் தம்பி யாரென் றழைத்திடப் பெறு
தற் கென்றார். (க௱௭)

தவசிவ மயமாய்ச் சுத்த சத்துவ முருக்கொண் டிந்தப்
புவியுய வந்த தென்னப் புகலுமிப் புனிதையாரே
திவியதே சோம யத்திச் செம்மலார் தம்மை யிவ்வா
றுவமனு நீத வாய்மை யொளிர்சிவ மேயென் றோதி. ()

விரிவுரை யருமை தோன்ற விடுத்தொரு சொல்லா லுண்மை
பெரிதுணா விரியக் கூறிற் பேதையிற் பேதை யாதுந்
தெரியுர னணுவு மில்லேன் றீயனேன் பேய னாயே
னரியவப் பெரியோன்வாய்மையறையநாவெழுமாறெங்ஙன்.

இத்திரு வடிக டம்மை யெம்மையு மெம்மை யாளு
முத்தமி யார ழைத்தாங் குயர்திரு வதிகை சென்று
புத்தல ரிதழி மோலிப் புண்ணியன் கோயி னண்ணிச்
சித்திசெய் வீரட் டேசன் றிருமுனய்த் தருகு நின்றார். ()

வேறு.

வீரட் டேசர் திருவழகை விழியா னுகர்ந்தார் விடையாதி
தீரத் துறந்த சீவன்முத்தர் திருவா ருளத்தாற் பெரும்போக
மாரத் தழுவி யத்துவிதா னந்தக் கலவி யனுபவமே
சாரத் தனித்தார் தன்மயமாந் தகுபேரின்பந்தலைப்பட்டார்.

உள்ளங் குளிர வுடல்குளிர வுயிருங் குளிர வுணர்குளிரத்
தெள்ளங் குளிர வுள்ளருஞ்சச் சிதாஅ னந்தத் திருவமுத
வெள்ளங் குளிரத் திருவாக்கே விமல மதகா வினவுசெவிப்
பள்ளங்குளிரப்பாய்வதெனப்பதிகநெறியிற்பாய்ச்சுகின்றார்.

பரவு பதிகம் பின்னருசி பலதந் ததிமா துரியநயம்
பரவு மமுதா வாயூறப் பருகப் பருகத் தெவிட்டாமே [யா
விரவு மியல்கண் டங்தோமுன் விடத்தாலிந்நாள் வளாதொலை
விரவு கொடிய வருவருப்பை விலக்கிற் றினைய தமிழமுதம்.

யாது புரிதுங் கைம்மாறிவ் விரும்பே றுதவிக் கெனநினைந்
தான், மாதுபாகன் றிருவதிகை மருவுந் திருவீ ரட்டேச,
னீது மெனினெல் லாமிவன்பாட் டெழுத்தொன் றுெவ்வா
வமைகவிவன், கோதி லானம் மபேதனுறு குறையு மில
னென் றிதுபுரியும். (கசச)

மாவுக் கரசு வணிக்கரசு வாணிக் கரசு முதலாய
தேவுக் கரசு நிறைதருமச் சேவுக் கரசு திகழ்வானிற்
பாவுக் கரசாந் திருத்தமிழ்மெய்ப் பாட்டுக் கரசே நீயேநன்
ஞவுக் கரசு நாவரசு நாவுக் கரசென் றிசைத்தருள. (கசரு)

மூன்று முறையுந் திருநாம முழங்கி யெழுவா னெலிகே
ட்டார், தோன்ற லாரவ் வானொலியைச் சுழூனெ நெறிமேற்
றோன்றொலியா, லூன்றி யுணர்ந்தார் பரவசமுற் றுறுபே
ரருளை நினைந்துநினைந், தான்ற விருமைத் திருத்தொண்டி
னருமை புரிந்தாங் கமர்கின்றார். (கசசு)

அந்நா ளமண்டூர்ப் போதனையா லகல்பா டலிபுத் திரநகர்
க்கு, மன்ன மமண்வேந் தெம்மடிகண் மகிமை யுணரா மட
மையினாற், றன்னு ணையினு ளண்டமெலாஞ் சலிப்பச் சலி
யாத் தனிமுதலைத், தன்னு ணையினுட் படுத்தநினை தன்மைத்
தொன்று தான்விழைந்தான். (கசஎ)

வேறு.

*அருள்கொண்ட வுணர்வின்றி நெறிகோடியறிவென்று,மரு
ள்கொண்ட மன்னவனு மந்திரிக டமைநோக்கித், தெருள்
கொண்டோ ரிவர்சொன்ன தீயோனைச் செறுவதற்குப், பொ
ருள்கொண்டு விடாதென்பாற் கொடுவாருமெனப்புகன்றான்.

*அரசனது பணிதலைநின் றமைச்சர்களு மந்நிலையே
முரசதிருந் தானையொடு முன்சென்று முகில்சூழ்ந்து
விரைசெறியுஞ் சோலைசூழ் திருவதிகை தனைமேவிப்
பரசமயப் பற்றறுத்த பான்மையினர் பாற்சென்றார். ()

*சென்றணைந்த வமைச்சருடன் சேனைவீ ரருஞ்சூழ்ந்து
மின்றயங்கு புரிவேணி வேதியனு ரடியவரை
யின்றுநுமை யரசனழைக் கௌமைவிடுத்தான் போதுமென
நின்றவரை நேர்நோக்கி நிறைதவத்தோ ருரைசெய்வார். ()

*நாமார்க்குங் குடியல்லோ மென்றெடுத்து நான்மறையின்
கோமானை நதியினுடன் குளிர்மதிவாழ் சடையானைத்
தேமாலைச் செந்தமிழின் செழுந்திருத்தாண் டகம்பாடி
யாமாறு நீ ரழைக்கு மடைவிலமென் றருள்செய்தார்.(கடுக)

எடுத்ததிரு வருட்பதிகத் தெம்மடிகள் சிவாநுபவ
மடுத்தெழுகெம் பீரதிட மணிவாய்மைத் திருவாக்கே
தொடுத்தெழுமெய்த் திறநோக்கிற் றூயபர சிவமேயித்
தடுத்தமலம் விடுத்தபெருந் தகையரெனுந் தகைவிளக்கும்.
திருப்பதிகமரசன்பாற்செலுங்குறையொன்றின்மையுந்தாங்
குருப்பதிக நதிமுடியெண் குணியெனலு மவ்வாற்றல்
கருப்பதிக டோரவமண் கயவரழி தரக்காட்டும்
விருப்பதிக முந்தோன்ற மேதகவாய் மலர்ந்தருள. (கடுஙு)

பதிகம்வினை யடிகளுடன் பாடின்மை யதிற்றுணிந்தார்
துதிபுரிந்தார் பற்பலகாற் றுணையடிக்கீழ் வீழ்ந்திறைஞ்சி
யிதமொழிசொற் றெழுந்தருளப் பெறிலடிக ளெளியேமுங்
கதிபெறுது மென்றமைச்சர் கைகுவித்தாங் கெதிர்நின்றார்.

சூழ்வினையச் சாதுரியத் துறையூகத் திறலமைச்சர்
தாழ்வினைய மொழிகடிருச் செவிசாத்தித் தறுகண்மறப்

பாழ்வினைய மண்குழுமு பாடலிபுத் திரம்புகுந்தார்
வாழ்வினையம் புவிக்கருள வந்தருளும் வாகீசர். (கருரு)

ஆங்கவர்செய் மருட்செயலா லருட்செயலி ஞற்றனவி
யோங்குமுறை யுலகுணர்த்தி யுவையாவு மவர்க்கேமன்
றீங்குதரு முற்பாதச் செயலாகக் கடன்மறுகாப்
பாங்குறுகற் பரியூர்பு பாதிரித்தண் புலியூரில். (கருசு)

சொற்றுணையே துணையாகத் தொழுதணைவார் பேறுவந்து
முற்றுணையும் புனலரசு முற்றவமென் பெற்றனனிக்
கற்றுணைமேற் பொற்றுணையென்கையேந்தப்பெற்றேனென்
றற்றுணையத் தானத்தி யானந்த மயனானான். (கருஎ)

சென்றருளும் வாகீசத் திருவடிகளப் புலியூர்த்
துன்றருளே புரிதோன்றாத் துணையடிக ளிணையடிக்கீழ்
முன்றொழுது திருவருண்மா மொழிபாடி யரிதகன்று
நன்றருளுந் திருவதிகை நகர்களிப்ப வருகின்றார். (கருஅ)

### வேறு.

*தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமு
நாயகன் சேவடி தைவரு சிந்தையு நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழிகண்ணும்பதிகச்செஞ்சொன்
மேயசெவ் வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே. (கருகூ)

### வேறு.

கொதிதழலாற் கொடுவிடத்தாற் கோபாதி சயக்களிற்றாற
கொளுங்கற் றாணு, லதிகபர மாத்தகிலே யருட்சைவ சயத்

தம்ப மகில மெல்லாந், துதிபெருக வமணுப்பட் டிலங்க கிறீஇ வருமருமைத் தோன்ற லாரிப், பதிபுகுத முன்னு லிற் பயிறவமென் னெனவியந்தப் பதிவாழ்கின்ருேர்.(கசூ0)

மறுகுதொறுங் கழைபூகம் வாழைமுத னிரைத்தலர்பொன் மணித்தா மங்கள், செறியுமலர்ப் பாவாடை திகழுமணி விதானங்கள் செழுந்தீ பாதி, துறுமுமெழி னடைப்பந்தர் துலங்கவல மத் தடியார்திருக் கூட்டஞ் சூழ, வறுகுமலர் சுண்ணமணி யாதியஞூ யெதிர்சென்ருங் கடியிற்ருழ்ந்தார்.

திருவேடச் சிவப்பொலிவுந் திருவுள்ளத் தெருட்பொலி வுஞ் சிவமாந் தன்மைப், பெருவாழ்வு மெதிர்வி ளங்கப் பெ றுகாட்சி கண்டுகளி பெருகவுள்ள, முருகாகின் றடிக்கடிவீ ழ்ந் துற்றிறைஞ்சித் திருத்தொண்ட ருவந்துசூழ, வருவாகீ சப்பெருமான் றிருவீரட் டானமெதிர் வயங்கப் போந்து.

திருக்கோயி லுட்புகுந்து பெருக்கோலிட்டிருக்கோர்ந்துசெ ப்பொ ணுத, திருக்கோலத் திருமுனிரு திருக்கோவில் பே ரின்பந் திளைப்பத் தாழ்ந்தார், திருக்கோவு திருப்பதிகந் திரு வாயின் மலர்ந்தோங்கத் திருக்கண் ணீர்தந், திருக்கோல முழுதொழுகத் திருநீறு சேருடத் திளையா கின்ருர்.(கசூஉ)

ஒருவாறு புறம்போந்தங் கொருவாம வுழவார மொளிர் கை யேந்திக், கருவாத ஊைப்பெரிய கரியமலஞ் சீத்தெமக் குக் கருணை வாழ்வு, தருவாய்மை தேற்றலினத் தனிஞா

னப் படையாலத் தளிப்பு றத்துங், திருவாளர் திருப்பணி
புற் சித்தன்முதற் புரிந்தமர்ந்து திகழா நின்றார். (கசுச)

அந்நாள்வெஞ் சமணெறிபொய் யனைத்துமென் வாகூறி
னறிவு வாய்ப்ப, மன்னான பல்லவன்பின் வாகீசத் திருவடி
கண் மாண்பெ லாமோர்ந், தென்னான்செய் தேனந்தோ
வென்றுபதை பதைத்துநடு நடுங்கியேங்கி, முன்னாய மூட
ர்களூ முன்னாத கொடுமையெலா முன்னிச் செய்தேன். ()

அன்னோவிப் பெருந்தீமை யகற்றரிதிங் கெவராலு மடிகள்
பாத, முன்னாகச் சென்றிறைஞ்சி முறைப்படினங் குறைப்
படர்கண் முற்று நீக்கப், பின்னாகா வாகீசப் பெருந்தகை
பே ரருளெனவே பெரிதுமுள்ளத், துன்னாநின் றுங்கடைய
வொருப்படுநல் விருப்புடனீ தனுற்று மாங்கே. (கசுரு)

கொல்லாமை வெளிக்காட்டிக் கொலைமுழுது மலைவின்றிக்
குறித்துச் செய்ய, வல்லார்க ளெஞ்சலிலா வஞ்சநிறை வெ
ஞ்சமண மடவோ ரிந்தப், பொல்லாத பாதகர்க்குப் புரித
ண்ட மவர்நாளும் புரியுங் கோற, லல்லாது வேறிலையென்
றமண்குலம்வே ரறத்தொலைத்தா னாற்றல் வேந்தன். ()

அமணரமர் பள்ளிகளூ மருகனமர் பாழிகளூ மனைத்துஞ் சித்
தச், சுமைசகடங் களிற்கொணர்ந்தே துலங்குதிரு வதிகைந
கர்த் தூய கோயில், சமைதரமா குணதரவீச்சரமெனவொன்
றமைத்திலிங்க தாப.னாதிக், கமைசெயன்முற் றியலநடாய்க்
கதிதருவா கீசபிரான் கழலிற் றாழ்ந்தான். (கசுஅ)

என்னுயிரே யுயிர்த்துணையே யேழையடி யேன்புரிதீங் கெல்லா மெந்தை, சன்னிதிசேர்ந் தாலன்றித் தவிராதென் றுளந்துணிந்து சார்ந்தேனெற்கோர், பொன்னிதியே யென்போல்வார் புகலிடமே யகலிடத்தார் புரிந்து போற்று, நன்னிதியே வாகீச நாயகமே யெனப்பலகா னமந்து மேலும். ()

பொறியிலியே னறியாது புரிந்தபல பிழைபொறுத்தி பொறுத்தி யென்னு, முறையிடுபு குறைந்தடைந்து முன்றாழ்தல் பின்றூத மூரி வேந்தன், குறைமுழுது நிறையருளாற் குணமாமுன் கொண்டமைதங் கோலங் காட்ட, மறைமுழுதும் வடித்தருளு மணித்திருவாய் மலர்திறந்து வருந்தேன் மன்ன.

அகிதநமக் காற்றினையன் றவைகளினோ ரணுவுநமை யடைந்த தின்றத், தகையுமுணர்ந் தனைசிவமே தனிமுதலாம் பிரமநெறி சைவமென்றே, நிகமசிவா கமமுதனூ னிகழ்த்துமுடி புண்மையெலா நேரே யாரு, மகிழுமுதோர்ந் துயச்செயித மாண்செயலே செய்வித்தாய் மன்னரேறே. (களக)

ஆதலினச் செயனோக்கி யகம்வருந்தே லென்றவனை யருளினோக்கி, நீதிதெரிந் தரசுபுரீஇ நிறையருள்பெற் றுய்தியென நிகழ்த்தக் கேட்டான், மாதவமென் முன்புரிந்தேன் வள்ளானல் லருட்பேறிம் மடமை யேற்கு, மீதரவென் றடிக்கடிவீழ்ந் திறைஞ்சுபுபற் பலதுதிக ளிசைத்தான் மன்னோ. ()

அனந்தரம்வா கீசபிரா னருடலைமேற் கொண்டணுவு மயர்த்திடாமே, மனந்தரமெய்ச் சைவநெறி வளர்த்தரசு வழாதி

யற்றி வனக்கி ரீப, கனந்தரவீ ரட்டேசர் கழலுமறவாநெறி
யிற் களித்து வாழ்ந்தா, ஙினந்தரமெய் யடியார்சூழ்ந் திறை
ஞ்சியசீர் வாகீச வின்ப வாழ்வு. (கஎங)

அன்னதனித் திருவதிகை யமர்ந்தருளிப் பன்னெடுநா ளரிது
போந்து, பன்னுதிருத் தலங்கள்பல பணிந்தேத்தித் திருப்ப
திகம் பாடிச் சென்றே, யின்னருளாற் றிருச்சூல மிடபகே
தனந்திருத்தோ ளிலங்க வாய்ப்புற்,றுன்னுசிவ னேதானென்
றுலகுணரப் புறத்திலுமிக் கொளிரக் காட்டி. (கஎச)

அப்பூதி யடிகண்மகற் கருவிடந்தீர்த்தருளியுமற்றதுகி றீஇப்
பின், மெய்ப்பூதி யார்வீழி மிழலையருட் காசுபெறீஇ விமல
ஞான, வைப்பூதி யப்பெருஞ்சீர் மாண்பினருந் திருவருளே
வயங்க முன்னிட், டெப்பூதி யுங்கொளன்மாண் பென்றுல
கோர்ந் தமையுமுறை யிலங்கக் காட்டி. (கஎரு)

ஆரியமுந் தென்றமிழு மானுனென் றடைமொழியா லவ்வி
ரண்டு, ளாரியத்தி னுந்தமிழே யதிகமெனத் தாண்டகமுன்
னுப பாவாற், றேரியவைத் ததுமன்றிச் செயலாலு மறை
க்கதவந் திறப்பித் தந்தத், தேரியலா ரியத்தாணைத் திறல்க
டந்துட் புக்கருளே திகழக்காட்டி. (கஎசு)

திருக்கைலை யெத்துணைமைச் சிறப்பினருந் தாமுயன்று செ
ல்லொ ணுச்சீர்ப், பெருக்கமுள தென்றுலகோர் பெரிதுணர்
ந்துய் வானருளாற் பிறங்கை யாற்றவ், வருட்கைலை தானே

வந் தவிர்தரக்கண் டின்னனப லற்பு தச்சிர், வருக்கநிகழ் தர ப்புவியின் மன்னுதல மெல்லாமு மகிழ்ந்து பாடி. (களஎ)

திருப்புகலூர் விருப்பினுறீஇத் திருப்பதிகம் பொருப்பரை யன் செல்வி பாகத், திருப்பவனைக் கருப்பினுமண் ணிப்ப வனைமெய்ப்பவனை யேன வான்மை, மருப்பவனைச் சுருப்பித ழிமாலையனை மாலையனை வலத்தின்வாமத், தருப்பவனைப் பல பாடி யருந்திருத்தொண் டினிதுபுரிந் தமர்ந்து வாழ்வார். ()

பன்னெடுநா ளங்கமர்ந்தெண் பதின்மேலோ ராண்டுசெலப் பரமன்முன்னு, ளன்னெடுவான் கயிலாயத் தருளியவா றை ந்தெழுத்தோ டக்க நீறென், றுன்னுசிவ சாதனமெய் யொ ளியேயெங் கணும்பரம்பி யுலக மெல்லா, மன்னியல்வை திகசைவ வாய்மைநெறி மயமேயாய் வளர்தனோக்கி.(களஅ)

மகிதலமா னுடவடிவின் வருசிவன் முத்தநிலை மாற்றிவாழுங் கருதிவிழைந் தக்குறிப்பே தருபதிகம் பலபாடிச் சகல வேத வகிலசிவா கமசார வத்துவித நிரதிசயா னந்த வாய்மை நிகழ்தருமா பரமுத்தத் திருமருவித் திருவடிக்கீழ்த் திளை த்து வாழ்ந்தார். (கஅ0)

சித்திரையிற் சதயமாந் திருநாளி லொருவாமெய்ச் சிவமே யாகி, யித்தரைவாழ் வுறவமர்வா கீசரமண் பதகர்விடு மிபத் தை முன்னிட், டத்தருண மருள்பதிக மதிலுமய ராதேனை யவற்று மிந்தச், சித்தவடத் திருமகிமை திகழ்தரவைத் திடி லிதன்சீர் செப்பற் பாற்றோ. (கஅக)

பேசருமா மறைபுகல்சுப் பிரமணியே வரமணியாம் பிள்ளை
யார்முன்,மாசகல்காழியின்முதற்ரும்வந்தருள்காற்சிவவேட
மலியுமாண்பின், றேசுவய சருண்முதிர்வா தியநேர்கண் டுவ
கைநனி தேக்கத் தாதை, யேசகங்கட் கெனுவப்ப ரேயென
வாய் மலர்ந்தருளு மிதனுற் ருனே. (கஅஉ)

அப்பரென விடுகுறிபோ லமைந்ததுபே ரதுவேபல் லண்
டங் கட்கு, மப்பரெனு நிலையுணர்த்தி யருட்சிவமே தாமெ
ன்ப காட்டு மந்த, வப்பரே பிள்ளாயென் றுரைதரவப் பெ
யர்புனைந்தா ரவரு மிவ்வா, றப்பருமா மகனுரு மகிலமுய
வந்தருளி யமர்ந்தா ரேனும். (கஅங)

வாகீசத் திருவடிகண் மகிதலத்தெண் பத்தொன்றும் வய
சின்காறு, மேகாம லருட்கோலத் தெழில்காட்டி யினிதுலக
மெல்லா முய்ய, மாகாதற் றிருவருளே வழங்கிவீற் றிருந்த
ருளும் வாய்மை மேன்மை, மோகாதி முற்றெழித்து முது
க்குறைந்தோ ரெவராலு மொழியொணுதே. (கஅச)

## வாகீசச்சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். உடுகூ.

---

## சுந்தரச்சருக்கம்.

பொன்னங் கடுக்கைப் புரிசடையெம் புனித னகிதன் பொ
ன்னருளோ, கின்னனங் தடுத்தன் புடையார்க்குக் கிடைப்பித்

தாளக் கிளர்கயிலை, யின்னந் தருக்கள் வல்லிமுதலெல்லாஞ் செறிந்தங் கெழில்பெருக, மன்னந் தனிப்பே ருய்யானம் வயங்கு மெவர்க்கும் வகுப்பரிதே. (க)

தருப்பஞ் சகங்கள் பலகோடி சார்வல் விகளுந் தழீஇயென்று, மருப்பஞ் சகச மலர்தளிர்பிஞ் சருங்காய் கனிமுன் னுவனுதைந், தருப்பஞ் சகல தினத்துமொழித் தோவா திலகவ் வுய்யானம், விருப்பஞ் சகங்க ளெல்லாஞ்செய் விமல மேன்மை மிகவளிக்கும். (உ)

அமுதசஞ்சீ வினிமுதலாமளப்பில்வகைமூலிகைகளெலாங் குமுதநாதன் றனக்குமுடற்குறையுங்காலாற்குமைப்பனவா விமுத லமுத நீர்நிலைகண் மிக்குப் பொலிவ பூவைசுசா திமுத னிகமா கமநாதத் திறனே தருமவ் வுய்யானம். (ங)

கொடிய விலங்குஞ் சிவோகம்பா வனையே குறிப்பி னிசைப்பதெவ, னெடிய தருக்கண் முதலெவையு நிலவு மூலகெலாம்பெருக்கு, மொடிவில் சிருட்டி மாதிரிகை யோமன் கருப்ப நிலையமதோ, முடிவின் மூல பண்டார மோமுன் புகலவ் வுய்யானம். (ச)

## வேறு.

இத்தகு முத்தி யானத்தி னுப்ப ணெண்டிசை கமழும்பல் வகைய, புத்தலர் மணங்கள் சாளர நெறியிற் பூந்துக ளின்

னறைபிலிற்றி, மத்த*மா ருதந்தை வரவிந்து காந்த மாண்
சிலா மயத்தமைந் திலங்குஞ், சித்திர மணிமண் டபமொன்
றுங் கதன்சீர் செப்பரி தெப்பெரி யவர்க்கும். (ரு)

ஆவிகள் போக மடுத்திடற் காக வம்மையென் றப்பனென்றி
ருவே, றேவிலா வுருக்கொண் டருள்சிவ னுமையாளுமை
யுட னமைவில்கா முகர்போன், மேவியாங் குளபல்வளனெ
லாங் காட்டி மிகுநசை மொழிகளும் விளம்பித்,தேவிய லரி
மான் றவிசல ரணைமேற் றிகழவீற் றிருந்தருள் செய்,தான்.

அவ்வழி யுடன்வீற் றிருந்தருள் புரியெ மன்னைத முன்னிலை
யாடித், திவ்விய வொளிக்கு ளுள்ளொளி யாகித் திகழுருத்
தோற்றமோ ரிரண்டு, ணவ்வியங் கண்கள் களிப்புற நாத
னல்லுருத் தோற்றமே நயந்தாங், கிவ்வெழிற் றோற்ற மித
யமுற் றீர்ப்ப தென்னையோ வென்னையோ வென்றாள். (எ)

தானுநேர் காமுற் றுங்குமா தோற்றந் தனையவ டிருவுளக்
குறிப்போர்ந்,தானசுந் தரத்தன் சாயைகைந் நீட்டி யப்பெய
ரிட்டழைத் தனனத், தூகிழ வுருவாய் வெளிவரக் கானு
உச் சுந்தரா வீண்டெமக் கென்று, நீநறுந் தொடையல்
புனைதனம் மருகே நீற்றுக்காப் பேந்துபு நிற்றல். (அ)

ஆயநற் பணிசெய் தமர்கென வானை யளித்தன னகிலமு
மளித்தாள், சாயையு மவ்வா றழைப்புறீஇ யிருவர் தையல

* மந்தம்=மத்தமென வலித்தல் விகாரம்பெற்றது.

ராகிவந் தனைய, நாயகி யாணை மேற்கொண்டாங் கவட்கந் நறும்பணி நாடொறு நயப்ப, நேயமா ரவர்பேர் கமலினி யார நிந்திதை யாரென நிகழ்வ. (கூ)

கடைக்கணி னேக்கே பிணித்தமா சனைத்துங் கழற்றுபு கருதருந் தூய்மை, கிடைக்கவெவ் வுயிர்க்கு மளித்தருண் மென்ருந் கிளர்பெருங் கருணையே பாயு, மடைக்கண் முற் றிருவர் முழுத்திரு நோக்கு மருதுறப் பெறுநிலை யாடி, யிடைக்கவின் யாவ ரியற்கவிக் கமைவ திசைப்பரிதிசைப் பரி தெவர்க்கும். (கo)

அருமறை முடியோ வதன்றெளி வாஞ்சி வாகம சாரமோ வவற்றுள், விரவுமுள் ளுயிரோ பரவருஞ் சுத்த வித்தியா நிலையமோ மேலாந், துரியமோ துரியா தீதமோ வதுல தூயமா முனிவருள் ளகமோ, புருவமத் தியமோ யாதென லாமப் புராதன தரிசன புளகம். (கக)

இன்னவா தரிசத் தாதர நோக்கு மிமாசலை யுமாபதி யெழி ன்முற், றுன்னரு முக்க ணுற்புய மாதி யுருவெலா மொரு விலா துதித்த, மன்னுமுள் ளொளியா மங்கிழன் மனுதி வர ம்பறு தரம்பெறு மானு, லென்னரோர்ந் துரைப்பார் சிவத் தினுட் சிவமென் றிலகுவின் மாற்றமொன் றிசைத்தும். ()

மூவரு மனைய திருப்பணி நியதி முறைவழா தின்பனீர்மூழ்கி நாவல ரெவர்க்கும் பரவருந் திறத்தோர் நந்தன வனத்தக நணுகித், தேவரு மலர்க ளாவன நிறையத் திருந்துபூம் பிட

கைதண் டிடைக்கொண், டோவரு மலங்கல் புனைதன்முன்
ஞளூ மொருங்குசெய் தொழுகுவா ரானுர். (௧௩)

வேறு.

இத்திருப் பணிபன் ஞளங் கியல்வுழி யிடையோர் காலத்
தத்திருப் பாற்க டற்க ணுலம்வந் தடர்ப்ப வஞ்சி
யுத்திருத் தவன்மு னும்ப ரோலெனக் கதறிச் சூழ்ந்த
கத்திருத் துவமு னெல்லாக் கனமுங்கொள் கண்ணுதாலோ.

அடைக்கல மடியே நிற்கே யடைக்கலந் தருண மிப்போ
திடைக்கல மல்லே மால மெனுந்திமிங் கிலத்தால் யாக்கை
நடைக்கலங் கவிழத் துன்ப நரலையு ளமிழ்கின் றேங்கட்
கடைக்கல மந்தே மெந்தாய் கைவிடேல் கருணை வள்ளால்.

என்னநின் றலறி ஞரவ் விரங்கொலி திருச்செ விக்கட்
டின்னலு மிரக்கந் தூண்டச் சுந்தரா நீபோந் தின்னர்க்
கின்னல்செய் தடர்ந்து டற்றி யெங்கணும் பரவு மாலந்
தன்னைநம் முன்கொ ணர்ந்து தருகென வருளிச்செய்தான்.

திருவரு ளாணை யோடு சேவடி சென்னி மேற்கொண்
டொருவருங் கைலைக் கோயி லொருவகைபுறம்போந்தன்ன
வரிபிர மேந்தி ராதி யனைவரு மினைய யாண்டும் [ணல்
விரிபுல கெல்லாங் கொல்லும் விடத்தெதிர் வந்தெம் மண்

திருக்கர நீட்டி நின்ற செய்கையே கண்டார் வானோ
ருருக்கரந் தாங்கவ் வால முலகினுக் கருளாஞ் செந்தேன்

பெருக்கர விந்தத் துற்ற பிரமர மெனத்தி ரண்டு
குருக்கரம் விரித்த மைந்த கொள்கைகண் டிறும்பூ துற்றார்

சுந்தர நாமத் தோன்ற றுணேயடி நமந்து பல்கா
லந்தர ரெனுமெம் பேர்க்கின் றவப்பொருள் கொள்ளா தாவி
தந்தர னருட்பேற் றிற்கோர்த் தரரெனத் தலேய ளித்த
தெந்தர மாமோ வென்னு வேத்திசை சோத்த மீந்தார். ()

இலேகர்நேர் கண்டு மந்தோ விதயமஞ் சுறச்ச மீபத்
திலேகவுந் துணிவி லார்சேய்த் தீண்டிபு செல்லச் சென்றுங்
கிலேகிய மருத்து வோர்தந் திடலெனவெங்கோன்செங்கை
யிலேகிடைப் பியவ ளித்தவ் வேந்தலா ரிறைஞ்சா நின்றார்

எதிர்தொழு தெழீஇவ லப்பா லிருந்திரு நீற்றுக் காப்புத்
துதிகரத் தேந்தி நிற்குஞ் சுந்தரத் தோன்ற லாரை
மதிநதி யிதழி வேணி வள்ளலா ரருளி னேக்கி
விதிதிதி யாதி யாய வியன்றெழி லாற்ற லேற்ற.       (உக)

## வேறு.

மேலாய வமரர்களும் வெருண்டுதளர்ந் தோடோடக்
கிலால மவல்புகல்போற் கின்னமுழு துறத்துரத்து
மாலால வியாபகத்தை யணுவாக்கி யங்கையினின்
பாலாக வமைத்தளித்த பரிசிதனு னின்றனிப்பேர்,     (உஉ)

அகிலமெலாந் தொழுதகுசீ ராலால சுந்தரனென்
றிகபரமு மொருவீடு மிசைப்பவருக் கிசைத்தருளுந்

தகுதியொடு நிகழ்கவெனத் தந்தருளி முந்துலரு
முகமலர்பு சுகமுழுதார் முதமிகுமப் புதர்குழுவை. (உ௫)

அருள்பெருக நனிநோக்கி யவர்க்கருளிப் பொதுவகையிற்
றிருமகிழ்நற் கருண்மலர்க்கட் சிறப்பருளி வாய்மலரும்
வெருவொழிநிர் விக்கினச விக்கினங்க டொழுதவர்க்கு
மொருவினர்க்குந் தருமுதனம் மும்பன்முக வும்பலன்றோ.

திதிவகுத்து மதிமிகுத்துஞ் சிறந்துளீர் மறந்தனையேன்
மதிமுகத்து மாதவகேண் மதிபிறர்க்கெனிசைப்பதையெண்
கதிபுகுத்துங் கணேசன்மலர்க் கழல்பணியாப் பழவினையா
லதிகரித்த செயன்முடியா தவ்வளவோ வெவ்விடத்தால்.

## வேறு.

உடலினு டயிராட வுளத்தினு டயர்நீட
விடரின்வா டிமையோர்க ளிரிந்தோட வமையாத
படரினே டொருநீயும் பரிந்துடலுங் கரிந்தந்தோ
விடரினு ழமுதெனநின் வெண்ணிறமும் பழுதாய்த்தால்.

இன்னன்மிக நுமைத்துரந்த வின்னவிட மகிலமெலாந்
தன்னுணவாக் காதமையத் தரிக்கின்றே நமதுகளத்
தன்னதுனை முதலாய வமரர்முனி வோராதி
யென்னருமெய் தெளிந்துய்வா னிட்டகுறி யாய்த்திகழ்க.

என்றருளி யருட்கரத்தி னிருந்தொளிரவ் வெறுழ்விடத்தை
நன்றமுதா கியநுகர்ந்து நவிற்றருஞ்செம் பொனிற்பதித்த

துன்றொளிநீன் முழுமணியிற் றுலங்கவமைத் தஞ்சலியா
நின்றருள்வேட் டெதிர்தொழுமந்நெடுமாலுக்கதன்மேலும்.

இன்னருளா லுரைத்தருளு மின்னினிமா தவகேட்டி
யுன்னினர்கா மியமுடிக்கு மும்பன்முகச் செம்பொருளை
நன்னரிறைஞ் சுபுகிர நரலைகடைந் தின்னமுத
முன்னியவா பெற்றுவணை முழுதளித்துன் செயனிறுத்தி.

வாழியென வாய்மலர்ந்தம் மாற்குவிடை மரபினளித்
தூழிமுத லாம்பரம னுமையொடுவீற் றிருந்தருள
வாழிகடைந் தமுதுபெறு மார்வமிக வாழிகரத்
தேழிசைவங்கியமெடுத்தோனெதிர்பணிந்தே கினனிப்பால்.

ஆலால சுந்தரனு ரநிந்திதையார் கமலினியார்
மேலாய மூவருந்தம் வியன்பணிசெய் தொழுகுநாள்
வாலாத நெறியொழிந்திம் மாநிலமோர்ந் துய்யவுந்தான்
றோலாத விருந்தமிழ்த்தண் சுவையமுத மாந்திடவும்.　　()

திருவுளங்கொண் டருள்வழங்குஞ் சீகண்ட சிவபெருமா,
னிருள்கடந்த தன்னிழலா மெம்மடிக டம்மையுமச், சுருண்
மணந்தெண் டிசைகமழுந் தூநல்லா ரிருவரையுந், தெருண்
மணங்கொண் டலர்கொய்வுழித் திரிந்துளங்கா முறப்புரி
ந்தான்.　　　　　　　　　　　　　　　　　　　　　　(ருஉ)

நங்கையரவ் விருவரையந் நம்பிவிழைந் தெதிர்நோக்க
மங்கையரு நோக்கினரம் மரபாயு மவர்மூவர்

தங்கள்பணி தலைநின்றா ராதலினாற் றருமலர்கொய்
தெங்கள்பிரான்கோயில்புகுந்திரும்பணிசெய்தருகணைந்தார்.

வேறு.

சுருதிபுக லாலால சுந்தரரா சியநோக்கிச் சுந்த ராசெந், துருதியளி முரலளகத் தோகையளை விழைந்தனைநந் துணைப்பொற் றாளே, கருதிமலர் கொய்வுழியக் காரணத்தாற் றாரணிபோய்க் கலந்த மர்ந்தே, வருதியவ ரோடெனவெம் மானருள வினாயிமய மலைமான் கூறும். (௩௪)

பன்னாளு மொருசேரப் பனிமலர்கொய் வுழியிவளைப் பரிசி யாமா, வின்னாள்வந் தெழுந்ததென விசைத்தவனி மானுட மா கென்ற நீதி, யென்னாகு மென்னாத விதுதகவோ வின்னருளுக் கென்று வெற்பின், மின்னோதல் வினவியமால் விடையமலன் விடையமல விளம்பு மன்னோ. (௩௫)

அகிலமெலா மளித்தருளம் மணைநீயா தலினிமயத் தணங்கு கேட்டா, யகிலமளித் தருளுமதற் கநுகுணமே நாம்புரிவ தறிநின் றாய்நீ, யகிலமுயற் கொவ்வொருஞான் றவனியுற வேண்டுநமக் கபேத ராற்றா, லகிலமிறைஞ் சிவனவளை யவரிவனை விழைதரநா மகங்கொண் டுய்த்தாம். (௩௬)

காரணமொன் றிலாதிவளைக் கைலையினின் றேகுவித்தல் கடமை யன்றாற், காரணமீ தல்லதுமிக் கைலையினம் மயமேயாங் கனம்பெற் றோருங், காரணநூல் விலக்குசெயல்

கருதினது சிறிதெனினுங் கவற்று துக்க, காரணமென் றுல
குவெரீஇக் கதிநெறிநின் றுய்ந்திடுகா ரணமு மாமால். (௩௭)

இன்னதிப மன்றியுமிங் கிவன்புரிகைத் தொண்டுவந்த வெ
மக்கின் னேன்வாய், மன்னுதிருத் தொண்டினிறை மறைவ
டித்துத் தெளிந்தொளிர்தென் மறைத்தே வார, மென்னு
மிசைத் தீஞ்சுவைமாந் திச்சையுமுந் துதலாலீ திசைத்து
நங்கா, யன்னதமிழ் மறைநிதரி சனத்தவனிக் குண்மையு
ணர் வளிப்ப தாமால். (௩௮)

இன்னனபன் னலங்களெலா மெய்துமிஃ தோர்செயலாவி
ன்ன தூயோ, ரென்னுழியெய் தினுமென்று மிமையவரான்
வேற்றிடத்தா விழிவு சார்மோ, வுன்னுமணி பழுதுறுமோ
வுறினுமொரு வாறுநம தொப்பி லாத, நன்னிழல்வேற் றிய
ல்யாண்டு நண்ணிலதென் றுணர்ந்துளனீ நவிற்றலென்னே.

என்றருளி யிடப்பாகத் திறைவிதிரு வுளங்களிப்பித் திருந்
தா னெம்மா, னன்றருளிச் செய்தபடி யாலாலசுந்தரனு ரகி
லம் போற்று, நின்றதிரு முனைப்பாடி நீணாட்டின் டாணு
ட்டு நிறைமுற் றோங்கி, நன்றுபுகழ் நாவலோர் நாவிலூர் பா
விலூர் நாவ லூரில். (௪௰)

உலகமெல்லா மீடேற வுயராதி சைவகுலத் துண்மை யேற,
மலருநிக மாகமநூல் வழியேற மொழியேற வழுத்துதென்
சொ, லிலகியசீர்ச் சடையனு ரிசைஞானி யார்மகிமை யெ

ங்குமேறக், குலவுமவர் மடியேறு குலமகவா யருளேறு கோல மேற. (சச)

திருவேற விருவோருந் திருத்தாதை தாயரெனுஞ் சிறப்பி னேற, வுருவேற வவதரித்தா ரொருவாத பெருவாழ்வுற்று வந்து கண்டா, ரிருவோரு மிளங்கோலத் தெழில்கனிந்த தனிச்சேயை யிருகையார், மருவேறு கமலமிசை வருசேயி னெடுத்தணைத்தார் மகிழ்மீக் கூர்ந்தார். (சஉ)

உலகினுரு வெலாம்விளக்கு மொளிவியட்டிக் கொளியளிக்கு மொளிப்பி ழம்போ, வலகிலழ கெலாந்திரண்ட வருளுருவோ தெருளுருவோ வடிய ரேமெங், குலமவனி யுலக மெலாங் குயிற்றுபெருந் தவப்பயனோ கோதின் ஞான, நல னிறைவோ சிவப்பொலிவோ நவிற்றரிதிம் மகவெனவுண் ணயந்தா ரன்னோர். (சரு)

தருநாவற் பதிமுழுதுந் தத்தமகோற் சவமெனவேசாற்று மோகை, வருநாளு நனிசிறப்ப மங்கலமாண் செயல்விளைத் தல் வள்ளல் போந்த, திருநாளச் சுவினிதுலாத் திங்களைத் தாய் தந்தைதவச் செல்வப் பேற்றை, யொருநாளைக் கொரு நாண்மிக் கொளிர்வடிவா திகளைவியந் துரைத்துச் சூழ்வ.

தாதையார் தாயரெனுஞ் சடையரிசை ஞானியார் தங்க ளுள்ளப், போதையா ரின்பநறுப் பொலிவையா ரிசைக்குநரவ் புனித வாய்மை, மேதையா ரிவர்க்கிதர விதமே யமைவ

தென விளம்ப நின்றார், நீதையார் கலியுலகு தீர்ந்துயநன் மகப்பெற்ற சீல ரம்மா, (சரு)

## வேறு.

இவ்வகை யருளாற் றங்கட் கெய்துசேய் மணியை யண்மைக், கைவரு மணியாய்ப் பெற்றுக் களிக்கடல் குளிக்கு மன்பர், தெய்விகச் சடைய னாருந் திகழிசை ஞானியாரு, மவ்வருண் மகவைப் போற்று மருமையா ரளக்கவல்லார்.

அப்படி யனைய சேயு மவரிடத் தகில முய்ய
வொப்பறப் புரிந்த வாட லுரையினு லளக்க வற்றோ [ரோ
செப்பில னிவனென் றென்னைத் திரக்கரிப் பவரன் றூன்
ரெப்பெரி யவர்க ளானு மெண்ணவு மொண்ணு தம்ம. (சஎ)

நம்பியா ருலகுக் கெல்லா ஞானவண் பணைவா ழூரர்
நம்பியா ருங்கொ ளாத்தர் நற்கம லேசர் தோழர்
நம்பியாரு பிர்களாய நங்கைமார்க் கென்றோ நாம
நம்பியா ரூர ரென்னு நயந்தழைத் துவந்து வாழ்ந்தார். ()

நாளொரு வண்ண மேனி நலனொரு காலை வெவ்வே
றூளுற வளர்ந்தாங் கென்னை யாளுடை நம்பி யார்பல்
வாண்மணிக் கலன்கண் மாறி மாறிப்பூண் டருட்பே ராட
னீளொளி மறுகு போர்ப்ப நிலவிய கிரம்பு நாளில். (சகூ)

*நரசிங்க முனைய ரென்னு நாடுவா ழரசர் கண்டு
பரவருங் காதல் கூரப் பயந்தவர் தம்பாற் சென்று

விரவிய நண்பி னாலே வேண்டினர் பெற்றுத் தங்க
ளரசிளங் குமரற் கேற்ப வன்பினான் மகன்மைக் கொண்டார்.

* பெருமைசா லரசர் காதற் பிள்ளையாய்ப் பின்னுந் தங்கள்
வருமுறை மரபின் வைகி வளர்ந்துமங் கலஞ்செய் கோலத்
தருமறை முந்நூல் சாத்தி யளவிறெல் கலைக ளாய்ந்து
திருமலி சிறப்பி னோங்கிச் சீர்மணப் பருவஞ் சேர்ந்தார். ()

ஆங்கது நோக்கித் தாதை யாருந்தம் மரபுக் கேற்பப்
பாங்குள புத்தூர்ச் சைவ பரம்பரைச் சடங்க விப்பே [குந்
றோங்குவே தியர்க்கு ணர்த்தி யுடன்பாடு தெரிந்தெங் கெங்
தேங்குசீர்த் திரும ணஞ்செய் தினங்கிய மனந்தெ ரித்தார். ()

தம்பதி நாவ லூரின் முன்புரி சடங்கெ லாஞ்செய்
தெம்பதி நம்பி யொப்பொன் றிலாமணக் கோலங் கொண்டு
தம்பதி யாதற் கெய்தத் தகும்பதித் தவப்பே றுய்ப்ப
வெம்பதி வினைக ளெய்ப்ப விருங்கடி விழைந்து சென்ற. ()

வரவெதிர் வரிசை மல்கச் சடங்கவி மறையோ ரேற்பப்
பரவையோர் நதிமேற் செல்லும் பரிசினப் பனவ ரிற்கோ:
சிரமண மண்ட பத்திற் சென்றெமை யுயக்கொண் ஞான
குரவன்வீற்றிருந்ததெய்வக்கொலுவையார்குறிக்கவல்லார்.

இவ்வியற் சுபமு கூர்த்தத் தெங்குல தெய்வ நம்பி
திவ்விய மணச்ச டங்கு திகழ்தரத் தொடங்கிச் செய்யு
மவ்வுழிக் கயிலை யின்க ணருளிய வண்ண லாங்கே
வைதிக மறையோ னாகிச் சார்ந்தனன் றடுத்தாட்கொள்வான்.

## வேறு.

வந்தருளச் சிவமறையோன் மணஞ்செய் கோலம் வகித்தரு
ளச் சிவமறையோன் மாட்டு வந்தாங், கிந்தமொழி கேண்மி
னிறை சபையின் மிக்கீ ரிவனமது மெய்யடிமை யெமது
தொண்டு, நந்தமொழிப் படிபுரியுங் கடப்பா டன்றி நண்ணு
சுதந் தரமிவற்கு நடவா தொன்று, முந்துதொடர் பென்று
முள திவற்கெ மக்கு மொழிசரத மாவணஞ்சொன் முறையி
னென்றான். (௫௬)

## வேறு.

* மாசிலா மரபில் வந்த வள்ளல்வே தியனை நோக்கி
நேசமுன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சியாற் சிரிப்பு நீங்கி
யாசிலந் தணர்கள் வேறோ ரந்தணர்க் கடிமை யாதல் [றார்.
பேசவின் றுன்னைக் கேட்டோம் பித்தனோ மறையோ னென்

* பித்தனு மாக பின்னும் பேயனு மாக நீயின்
றெத்தனை தீங்கு சொன்னா யாதுமற் றவற்றா னாணே
னத்தனைக் கென்னை யொன்று மறிந்திலை யாகி னின்று,
வித்தகம் பேச வேண்டாம் பணிசெய வேண்டு மென்றார்.

## வேறு.

ஆசிலென் வேறெனச்சொ லடையிற் றாஞ்சி வாரியசந் ததி
யென்ன வருளின் வாய்மைத், தேசியலொப் பரும்பெரு
மைச் சிறப்பு நீடச் சிவசாதிக் கயலாய திசைமு கத்தோன்,

வாசலென்வை திகமறையோர் வடிவே யாங்கு வந்தமறைக்
கிழவனுரு வென்ன யார்க்கும், பேசுயர்வு மதிற்சூழ்வுந் தே
ற்றி யாங்கெம் பிரான்பணிநீ செயவேண்டு மென்று பேசும்.

ஆணைமொழி யருட்டொடர்முன் பற்றி யீர்ப்ப வாங்கெழு
ந்து பாங்குறச்சென் றருள நம்பி, பேணுமறை யவனுடை
வுடன்பி னோடிப் பிதாமகற்கா ளோலைகொளல் பிழையென்
றுங்கத், தாணுவையா வணம்வாங்கிக் கிழிப்ப வற்றூற் றுவி
லா வடிமையெனுந் தன்மை யாருங், காணவிளக் கினேநன்று
வெண்ணெய் நல்லூர்க் கவின்மறையோர்ச் சேறுமெனக்
கழறி யேக. (சூO)

அவனைவிடா துடனேக வெமையாண்டம்பி யாரூர ரண்ண
லுமாங் கவையார் முன்னே, யவனைவிடா வழக்குணாப்ப
வனைய மன்றத் தந்தணரா ரூரார்குலத் தான்ற தொன்மைச்,
சிவனைவிடாச் சிருணர்ந்தோர் மூன்றி லொன்று தேற்றுமெ
னக் காட்டிடவச் செய்ய வோலை, சிவனைவிடா வச்சவையா
ரேவ லான்முற் செழுந்தவத்தோர் கரணன்வா சிப்பதானன்.

## வேறு.

* அருமறை நாவ லாதி சைவனூ ரூரன் செய்கை [பால்
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக் கியானு மென்
வருமுறை மரபு ளோரும் வழித்தொண்டு செய்தற் கோலை
யிருமையா லெழுதி நேர்ந்தே னிதற்கிவை யென்னேழுத்து.

## வேறு.

எனுமுரைகேட் டனர்மேலுஞ் சாட்சி யாய்க்கை யெழுத்தி
ட்டார் பெயர்களும்பின் னிசைப்பக் கேட்டா, ரனையபெரு
ம்முதியருஞ்சாக் கிரசு ழுத்தி யகன்றரிய சாக்கிரத்துற் றுங்கு
மெய்யே, யினையசெய லென்றிடநின் பிதாம கன்ற னெழுத்
தோவென் றுறநோக்கித் தெரிதி யென்று, பினையுமுதி யவர்
நம்பி யின்வா லன்பாற் பேணியெழு மனக்காதற் பெருமை
காட்ட. (௬௫)

நதியிதழி மதிகரந்து போந்த வந்த ணாளனுமாங் கதுவினவி
நன்றிவ் வோலை, முதியவெழுத் திவனேகா ணுறவல் லா
னம் மூதாதை வரைந்தகொணு முற்றும் பார்த்தும், மதிபி
சைசம் மதிமுனைமி னென்ன வாங்கே வரவழைத்தொப் புண
ர்ந்தடிமை வாய்மை கூற, விதியிதுவென் றுடம்பாட்டி னம்பி
யுண்மைவிளக்கியிறை யவற்றொடர்மா விருப்பையோர்ந்தும்.

நம்பியா ரூரர்குலங் குணமுன் னுய நாடரிய பீடரிதி நாடி
நாடித், தம்பிரான் றோழர்மேற் காதல் கூருந் தன்மையா
லம்மறையோர் தடுத்தாட் கொள்ளு, மெம்பிரான் முகநோ
க்கி நுமக்கிவ் வூரேல் யாவுங்காட் டுகவெனச்சென் றிரும்
பொற் கோயி, லும்பரார் பதிமறைந்து விடைமேற் றோன்றி
யொளிர்தரக் கண்டிறைஞ்சுநம்பிக் குணர்த்து மெம்மான். ()

## வேறு.

* முன்புநீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை கூரப், பின்புநம் மேவ லாலே பிறந்தனை மண்ணின்மீது, துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்து வந்து, நன் புல மறையோர் முன்னர் நாந்தடுத் தாண்டோ மென்றார்.

* என்றெழு மோசை கேளா வின்றவான் கனைப்புக் கேட்ட
கன்றுபோற் கதறி நம்பி கரசர ணுதியங்கந்
தூன்றிய புளகமாகத் தொழுதகை தலைமே லாக
மன்றுளீர் செயலோ வந்து வலியவாட் கொண்டதென்றார்.

* எண்ணிய வோசை யைந்தும் விசும்பிடை நிறைய வெங்
விண்ணவர் பொழிபூ மாரி மேதினி நிறைந்து விம்ம [கும்
மண்ணவர் மகிழ்ச்சி பொங்க மறைகளு முழங்கி யார்ப்ப
வண்ணலை யோலை காட்டி யாண்டவ ரருளிச் செய்வார். ()

* மற்றுநீ வன்மை பேசி வன்றொண்ட னென்னு நாமம்
பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
வற்சனை பாட்டே யாகு மாதலான் மண்மே னம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார். (சுகூ)

## வேறு.

அருச்சனைபாட் டேயாகு மென்னுந் தேற்றத் தாதிசைவர்க் கான்மார்த்த பரார்த்த மாய, வருச்சனையேகுலதருமமுக்கி யாங்க மாதலினவ் வழியேகொண் டமையி னம்பி, யருத்திகி

றை தீந்தமிழ்ப்பாட் டமுது ஞுத்தற் கருத்திவரு செயற்கி
டையூ ருகுமென்னு, மருத்திதெரித் திருமடவார் வாஞ்சை
யாலன் றவனியிற்செல் வித்ததென்வா யறிவித்தானல். ()

## வேறு.

* தேடிய வயனு மாலுந் தெளிவுரு வைந்தெ ழுத்தும்
பாடிய பொருளா யுள்ளான் பாடுவாய் நம்மை யென்ன
நாடிய மனத்த ராகி நம்பியா ரூரர் மன்று
ளாடிய செய்ய தாளை யஞ்சலி கூப்பி நின்று. (எக)

* வேதிய னுகி யென்னை வழக்கினல் வெல்ல வந்த
வூதிய மறியா தேனுக் குணர்வுதந் துய்யக் கொண்ட
கோதிலா வமுதே யின்றுன் குணப்பெருங் கடலை நாயேன்
யாதினை யறிந்தென் சொல்லிப் பாடுகே னெனமொ ழிந்தார்.

* அன்பனை யருளி னேக்கி யங்கண ரருளிச் செய்வார்
முன்பெனைப் பித்த னென்றே மொழிந்தனை யாத லாலே
யென்பெயர் பித்த னென்றே பாடுவா யென்றார் நின்ற
வன்பெருந் தொண்ட ராண்ட வள்ளலைப் பாட லுற்றார். ()

## வேறு.

* கொத்தார்மலர்க் குழலாளொரு கூறுயடி யவர்பான்
மெய்த்தாயினு மினியானையவ் வியனுவலர் பெருமான்
பித்தாபிறை சூடியெனப் பெரிதாந்திருப் பதிக
மித்தாரணி முதலாமுல கெல்லாமுய வெடுத்தார். (எச)

* முறையால்வரு மதுரத்துடன் மொழியிந்தள முதலிற்
குறையாதிலை மும்மைப்படி கூடுங்கிழ மையினு
னிறைபாணியி லிசைகொள்புணர் நீடும்புகழ் வகையா
லிறையான்மகி ழிசைபாடின னெல்லாதிக ரில்லான். (எரு)

* சொல்லார்தமி ழிசைபாடிய தொண்டன்றனை யின்னும்
பல்லாறுல கினினம்புகழ் பாடென்றுறு பரிவி
னல்லார்வெண்ணெய் நல்லூரருட் டுறைமேவிய நம்ப
னெல்லாவுல குய்யப்புர மெய்தானருள் செய்தான். (எசு)

* அயலோர்தவ முயல்வார்பிற ரன்றேமண மழியுஞ்
செயலானிகழ் புத்தூர்வரு சிவவேதியன் மகளு
முயர்நாவலர் தனிநாதனை யொழியாதுணர் வழியிற்
பெயராதுயர் சிவலோகமு மெளிதாம்வகை பெற்றாள். ()

## வேறு.

எவ்வகைய சொற்பொருளுஞ் சத்தி யீச னெனுஞ்சுருதி வாய்மைநிலை யினைத்தேற் றற்கோ, திவ்வியசீர் மாமறை வாக் கியத்து ணின்று திகழ்தலினே யெல்லாமுஞ் சிவனே யென்னு, மவ்வியல்பு தேற்றிடுசீ ருத்தி ரத்தி னுயபல பல வகைச்சொல் லனைத்து மொன்றிச், செவ்வியசீ ரைந்தெழு த்தின் பொருளே யாய சிவமேயாய்ச் சிறந்தொளிருந் திற த்தி னாலோ. (எஅ)

உறவுபகை நொதுமன்முத லொன்று மோரா தொருகரு ணைப் பெருவெள்ள மோவா தென்றும், பெறவுயிர்க ளெ

வைக்குமருள் பெற்றி யாலோ பேணுமடி யவர்யாது பிழை செய் தாலுஞ், சிறிதுமவை திருவுளங்கொ ளாமை யாலோ செப்பரிய பற்பல்பொருட் சிறப்பி னாலோ, வறிவர்தொழு நம்பிகடாம் பித்தா வென்றே யழைத்தருளிற் றென்றடியா ரன்பு கூர்வார். (எகூ)

இவ்வகைபல் பொருடருமா மதுவென் றேதா னின்பகத்துற் றமைதெளிக வென்றே யெம்மா, னவ்வுரைமேற் பேயனுமா குகநா ணேனென் றதுபெயராச் சாதனத்து மமைத்துப் பாவுந், திவ்வியவம் முதல்கொண்டே பாடென் றூனஞ் சேக்கிழார் பிரானுமது சிரமேற் கொண்டே, யெவ்வமகன் றுயவுலகம் பித்தர் வார்த்தை யெனத்தாமு மப்பெயராங் கிசைத்தா ரென்ப. (அ0)

இவ்வாறிங் கொருமணத்தின் றொடர்பு நீக்கி யியலிசைச் செந் தமிழருட்பா வென்னும் வாய்மைச், செவ்வாதி மறை வடித்த சாராற் சார தேவாரப் பணியனவ ரதச்செம் பூசை, யெவ்வாற்றி னுகினுங்கொண் டருளு மீச னிருமணம்பின் புரிமனங்கண் டினிச்செய் விப்ப, தவ்வாற்றி னியதிகடந் தூட்டா கன்ம மாவிகட்கப் பயனெனத்தேற் றருளேயென்ப.

பல்லாறு நம்புகழ்நீ பாடென் றீசன் பணித்தருளுந் திருவிளையாக் கலியே பற்றி, நல்லார்மன் றிருவெண்ணெய் நல்லூர் நின்று நடந்தருளித் தமதுதிரு நாவ லூர்வந், தல்லாரு மணிகண்டத் தடிகள் பொற்சே வடிகள்பரா யாட்கொண்ட

வருமை பேணிச், சொல்லாருந் திருப்பதிகம் வெண்ணெய் நல்லூர் தொடர்புறவாய் மலர்ந்தருளித் துதித்துவாழ்ந்தார்.

ஆங்கரிதி னீங்கிவழி யடியர் சூழ வருத்திமிகத் திருத்து றையூ ரமலன் கோயில், பாங்குறவுட் புக்கிறைஞ்சிச் செக் கர் வேணிப் பரமனிறை தவநெறிதந் தருளு கென்னத், தே ங்கமழ்பா சுரந்தொறுமீற் றமைத்தி யாண்டுஞ் சிவசுதந் தர மின்மை தெளியப் பாடித், தாங்குபதே சந்திகழ்வி சாக நா ள்வை சாகமதி தனிற்பெறுபு சார்ந்து வாழ்ந்தார். (அங)

அன்னாளின் பின்னாளா மனுட நாளங் கரிதகன்று திருவதி கை வீரட் டானத், தென்னாதன் றிருவுருக்கண் டிறைஞ்சு மார்வ மீர்த்திடவுந் திருநாவுக் கிறையெம் வாழ்வு, கைந்நா ண்மென் மலர்மணக்கு முழவா ரத்தொண் கதித்தொண்டு பதித்தொண்டு கவின வாய்த்த, வின்னாடு துதித்தலமா மிதி த்த லம்மா வேற்புடைத்தோ நடுங்குமுள மென்றுட் கொ ண்டார். (அச)

அத்தகைய திருவுளங்கொண் டருளு நம்பி யாரூரர் திருவ திகை யணித்தா யோங்கு, சித்தவடத் திருமடத்திற் பரிச னங்க டிருத்தொண்டர் குழாஞ்சூழச் சென்று சேர்ந்து, முத்தர்மனத் தமரதிகை முதல்வன் பாத முளரிதிரு வுளம ருவ மோன னந்த, சுத்தவறி துயிலமர்ந்தார் பாங்க ரே னைத் தொண்டருந்தந் தொண்டியற்றித் துயின்றா ராங்கே.

## வேறு.

* ஆதுகண்டு வீரட்டத் தமர்ந்தருளு மங்கணரு
முதுவடிவின் மறையவராய் முன்னொருவ ரறியாமே
பொதுமடத்தி னுட்புகுந்து பூந்தாரான் றிருமுடிமேற்[றூர்.
பதுமமலர்த் தாள்வைத்துப் பள்ளிகொள்வார் போற்பயின்

* அங்கிலையா ரூரனுணர்ந் தருமறையோ யுன்னடியென்
சென்னியில்வைத் தனையென்னத் திசையறியா வகைசெய்த
தென்னுடைய மூப்புக்கா ணென்றருள வதற்கிசைந்து
தன்முடியப் பால்வைத்தே துயிலமர்ந்தான் றமிழ்நாதன்.()

* அங்குமவன் றிருமுடிமேன் மீண்டுமவர் தாணீட்டச்
செங்கயல்பாய் தடம்புடைசூழ் திருநாவ லூராளி
யிங்கென்னைப் பலகாலு மிதித்தநீ யாரென்னக்
கங்கைசடை கரந்தபிரா னறிந்திலையோ வெனக்கரந்தான்.

* செம்மாந்திங் கியானறியா தென்செய்தே னெனத்தெளிந்து
தம்மானை யறியாத சாதியா ருளரேயென்
நம்மானைத் திருவதிகை வீரட்டா னத்தமர்ந்த
கைம்மாவி னுரியானைக் கழல்பணிந்து பாடினார். (அகூ)

பாடியருள் பெற்றனைய சித்தவடத் திருப்பதியின்
மாடொழுகு திருக்கெடில மாநதியின் றாநீரிற்
பீடுறவை கறைமூழ்கிப் பேணியவப் பதியமர்ந்த
சேடிதழி முடியாதி சிதம்பரநா யகற்பணிந்தார். (கூ0)

இத்தலநம் முடித்தலத்தி னெந்நைதிரு வடித்தலங்கள்
வைத்தருளி மறுக்கவுநாம் வழங்கியதென் றருமைநினை இச்
சித்தநெகிழ் தரவனைய சித்தவடத் திருமடத்தி
னத்தனைநா டொறுமிறைஞ்சி யருள்பாடி யமர்ந்திருந்தார்.

அறிவுபொறை யடக்கநிறை யருள்வாய்மை யகந்தூய்மை
நெறிவிரத நியமாதி நிறைகுணமுற் றொருங்கமைந்து
செறியருளாற் சைவநெறிச் சேர்ந்துதிருத் தொண்டுமுழு
துறுமரபி னிறையன்பி னெருவாது புரிவார்க்கும். (கூஉ)

அரியனவாஞ் செயல்களின்மிக் கரியசெய லிரண்டருளாற்
புரியதிகா ரத்தலைமை பூண்டுபுரா ணுதிகளால்
விரிமறையால் வியந்தோதும் விபுதேச ரிருவருக்கு
மெரியிடைநின் றருந்தவமே யியற்றுமகா விருடிகட்கும். ()

அகம்புறமுஞ் சிவார்ச்சனைசெ யருந்தவர்க்கு மாதார
முகம்பரவிக் கடந்துசுழு முனைநெறிமே லினிதமருஞ்
சகம்பரவு சிவயோக சாதகர்க்கும் போதகர்க்குஞ்
சுகம்பெறமுன் காண்பரிய துணையடித்தா மரைமலர்கள். ()

அரியதவ மதற்கெனவோ ரணுத்துணையும் புரியாமே
பரிசனமும் புடைதுயிலப்பள்ளிகொண்டாரொருவர்முடிச்
சிரம்வலிய மறுத்திடவு மறுத்திடவுந் திறம்பாமே
மருமலரா மெனிலவர்தம் வாய்மைவழுத் துநரெவரே. ()

இருக்கவிஃ தாங்கவர்க்கவ் விணையடித்தா மரைகிடைப்பித்
தருக்கநிகழ் வித்துளவிச் சித்தவடத் துத்தமச்சீர்ப்

பெருக்கமுளைப் பதையெந்தப் பெரியவர்க்கு மரியதெனிற்
சுருக்கவறி வெனுமிலியான் சொல்லாமை துரிசாமோ. ()

இத்தனிமா சித்தவடத் தினிதமர்ந்த வெமதடிகள்
சத்தியஞா னானந்தத் தனிமுதலே தாமாய
வத்தகுசீர்த் திருநம்பி யாரூர ராங்ககன்று
மத்தியிற்பஃ றலம்பணிந்து வளர்தில்லை வனம்புகுந்து. ()

பொற்பொதுவிற் சிற்பரன்செய் புரிதிறலைந் தொழினடங்
டற்புருகு சொற்பதிக மதுபாடப் பொதுநாதன் [கண்
பொற்புகிறை நெற்பணைசூழ் பொருவருநந் திருவாரு [தே.
ரிற்புருகென் றருண்மொழிவா னிசைசிரத்தின் மிசைபுனைந்

ஆரூரிற் றியாகேச னருள்பாடி யவனருளாற்
சீருரும் பரவையார் திருமணம்பெற் றருண்மணக்கும்
பேரூருந் திருத்தொண்டத் தொகைபாடிப் பிரான்பணியா
லேரூரு மிராசாங்க சிவவேட மேயிலங்க. (௯௯)

தம்பிரான் றோழரெனத் தருநாமத் திருநாம
மும்பிரா னருளூறப்பெற் றொருவாது திருவாரூர்
தம்புரா தனதலமாத் தங்குபுமற் றெங்குறினு
மும்பரா ரும்பரவ வொண்டமிழ்வாய்த் தொண்டமர்ந்தே.

நிகழ்நாளிற் குண்டையூர் நெற்பரவை யிற்புகுத்தித்
தகுமர்ட கம்மாக்கித் தலையணையி னிலைசெங்க
றொகைநீடு நதியிடுபொன் றொல்கமலா லயத்தெடுத்துச்
சசம்வாழ வொற்றியூர்ச் சங்கிலியார் மணஞ்சார்ந்து. (௧௦௧)

உலகமெலாந் தனக்காளா யுடையவதீ தப்பொருளை
யிலகுறுதன் றாதாளா யேகுவித்தாற் றாடுபுகூஉக்
குலமதலை முதலைதரக் கொடுப்பித்திவ் வாதியபன்
னலனிறையற் புதச்செயல்க ணடைபெறுசெந் தமிழ்பாடி.

அருட்பாவி னசையாலே யவனிபுகுத் தியநாதன்
விருப்பார நினைவித்து விரிஞ்சனரி மாலாதி
சுருப்பாடு மலரலங்கற் சுரர்பணிந்தவ் வரனாணை [ற்றை.
யொருப்பாடு புகன்றுடன்சா ரொண்களித்திண் வெண்களி

எதிர்கிறுவித் திருக்கயிலைக் கெழுந்தருளு கெனவேண்ட
வதிர்கயமேல் கொண்டருளி யவ்வமரர் சூழ்ந்துவர
முதிருணர்சே ரேசனையுண் முன்னுகின் றெழுந்தருளிக்
கதிர்முடிவேந் துறமுன்னர்க் கயிலாயத் துட்புகுந்தார். ()

வந்தனையோ வென்றிறைவன் வாய்மலர்ந்து பன்னெடுநா
ளந்திலகன் றவனியுற்ற வாராமை வெளிக்காட்ட
மந்திரமா முனிவரெலாம் வருதடையா தேனுமிலா
திந்தவிடத் திறையேபோ லெய்துமிவ னாரென்ன. (கoரு)

நந்தமரா ரூரனென நகைமலர முகமலர்ந்து
தந்தனிவாய் மைமுழுதுஞ் சாற்றுவாயுட் போற்றியவைத்
துந்தபர சிவனெனவே யுடன்கொள்ள வாலால
சுந்தரராய் முன்போலத் தொழுதமர்ந்தார் வன்றொண்டர்.

சுந்தரச்சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௩சுகூ.

## பலகதைச்சருக்கம்.

முன்னாளிற் சலந்தரன்றன் றாமனைபாற் காம முதிர்மோக
முதுக்குறையை மூடமதி மான்று, பின்னுவ தவிர்வதொரு
சிறிதுமுண ராதபெற்றியனுயுற்றுணர்வில்பேதையர்போன்
முகுந்த,னென்னேமுத்தொழிலிடையோர் தொழில்பூண்டு
விதிதேற்றிடுங்குரவ னுயுமனந்திரிந்துசலந் தரன்போன்,
றன்னேசென் றத்தெய்வக் கற்புடையாட் புணர்கா லவளு
ணர்ந்தாங் குயிரிழந்தாங் ககம்பதைத்தீ தறையும். (க)

மாலெனும்பேர்ப் பொருளிதுவே யென்னமன மான்றென்
மாண்பழித்தாய் பூண்பழியென் னுயிர்ப்பழியோ டேற்றாய்,
வேலியியல் புரப்பதலாற் பயிர்கவர்வ துண்டோ விதித்தவ
ற்றைத் திதித்தருளு மேதையனென் றுனையோ, ஞாலமு
ளைப் பதைநன்று நன்றுசிறி தேனு நாணிலையின் கோணிலை
யோ நயந்தளிக்குஞ் செங்கோன், மேலினியென் பலபுகன்
றீன் டெனக்கிழைத்த தீய வினைவசத்தான் மனையிழந்து
மிக்குலைகென் றுளைத்தாள். (உ)

பின்னுரிய தன்னரிய பெருந்தகைய கற்பும் பேதுற்ற தேயெ
னுநோப் பெருந்தாபம் வெதுப்பத், துன்னரிய வன்னியிடை
த்தோய்ந்தனைய தூலந் தொலைத்தருளாற் றாயபரஞ் சோதி
மய மானு, ளின்னிலைநேர் கண்டபினு மென்சொல்கே னந்
தோ விறந்திடுமப் பிருந்தையுட லெரிசாம்ப ரிடைவீழ்ந்,

துன்னரிய பெருமால்கொண் டன்னவள்பேர் பலகா லுரை
த்துரைத்தாங் கலறுதல்கேட் டொண்கமலத் திருமான். ()

தன்னுரிய தலைமகன்மேர் கந்தவிர்த்தாங் கவன்றுன் றனைப்
பிரியா வகைமணந்து தழுவுநிலை வேண்டி, யென்னினிநாம்
புரிசெயலென் றினைந்துபல தலங்க ளெங்கணுஞ்சென் றின்
னலொழி பின்றியிடர் நீடி, முன்னரிய தவப்பயனாற் பன்
னரிய பெருஞ்சீர் முற்றுநிறை சித்தவட முதுநகரம் புக்
காங், கன்னிசிவ காமிதிரு வடித்துணையே துணையா யடுத்தி
றைஞ்சி வழித்தவிர்ந்த வருந்தவங்கள் புரிந்தாள். (ச)

கௌரிதிரு வடிநாளுங் கருத்துறப்பூ சித்தே கமலைபுரி யரு
ந்தவ... கனிவுறச்செய் தீர்ப்பச், சிவையமல னுடனவட்
குப் பிரசன்னை யாகித் திருநந்தி தனைவிடுத்தத் திருமாலை
யழைத்தாங், கவன்மயனீத் திருந்தூய்மை முழுதுமளித் தவ
ட்கே யருமணஞ்செய் வித்தனளத் திருவருளா லனைய, திவி
யநகர் பிரசன்ன விலக்குமிமா புரமென் றிருப்பெயர்பெற்
றுளதின்னுஞ் செப்புவது கேண்மின். (ரு)

## வேறு.

மலையமுனி வில்வலனை வாதாவி வதம்புரிந்த மாட்சி யா
ரடு, நிலைகுலையா தருந்தவங்க ணிகழுலகிற் றிகழுறச்செய்
நிலைய தேனுங், கொலைசெயப்பட் டார்பிரம குலவிந்துற்
பவராய கொள்கை யாலக், குலநலனோர் வுறப்பிரம கத்தி
யரு ளால்வகித்துக் கொண்டான் மன்னே. (சு)

பிரமகத்தி யேற்றருள்சிர் பெறுமுனியாங் குறுமுனியைப்
பிரிவு கேட்டுப், பரவுசிவ தலம்பலவும் பணிந்தினிய சித்த
வடப் பதியின் மேவி, விரவுசிதம் பரநாதன் வியன்றளியி
னைமிழுகமேர் மேல்பால் வைகும், வரதடநீர் படிந்தெழுவும்
வருபிரம சாயைபவம் மடிந்த தாலோ. (எ)

உவகைமனத் தள்ளுற வள்ளுறநீ ரிஷிஜுக்கோய்ந் தரிய
ராய், சிவகிபமச் செயன்முடித்துச் சிதம்பரே சரணடிகள்
சென்று தாழ்ந்து, கவிதுதிகள் புகன்றுசில நாளிருந்தா ரரு
டிளைத்து நயந்து சென்று, னவன்முழுகத் திருத்தடமாங்
ககத்தியதீர்த் தம்மெனும்பே ரடைந்த தென்றும். (அ)

விண்ணிறைமுன் கௌதமனால் வினையோணி நிறைவடிவாள்
மெலிந்து வெள்கி, பெண்ணிலபுண் ணியதலங்க ளெய்தியு
ந்தி ராதாக விடாமிக் கேங்கிப், புண்ணியமுற் பெரும்பய
னுற்புணிதமலர் சித்தவடம் புகுந்து மேல்பா, லண்ணிய
கத தீபதீர்த்தம் புகுந்தாடி முன்னுடலி னுற்றி கின்ற. (கூ

மகதிளையம் பகமாகப் படரொளிகண் டொழிந்து பய
மா னந்த, மிகவெழுப்பு சிதம்பரப்பேர் விமலேசன் றிருவடி
யண் மேவித் தாழ்ந்து, திகழுதுதிகள் பலபுகன்று திருவரு
ளெபற் றொருவரிய சேணிற் சென்றான், ககமகிழ்வுற் றற
நெறியி னரசளித்து வாழ்ந்தனனவ் வமரர் கோமான். (க0)

சந்திரன்முன் சுரகுரவன் சாயமரு டருநோயைத் தீக்க
லாற்றான், சிந்தைநகலவன் றெத்தலத்துந் தீராதிச் சித்தவடத்

சென்று சூலே, நந்துபுனல் பருகுபுநோய் நசித்திடப்பெற்றுதிசிதம் பரநா தன்ருள், வந்துதொழு தமர்ந்தருளீ வழுத்திவிடை பெற்றேகி வாழ்ந்தான் மன்னே. (கக)

மாதிரமோ ரெட்டினுயர் வடதிசைகா வல... சித்த வட-முன் சென்ருங், காதிசிதம் பரநாத னருட்கழலன் புருக்குமனத் தவனுய்ப் பன்னுட், டிதறப்பூ சித்தேத்திச் செயற்கருமா தவம்புரிந்து சிந்தை யொன்றி, யாதரமேன்மேற்பெருக வமர்ந்தனனுங் கவற்கருள்வா னகில நாதன். (கஉ)

இமயமலே தருமமலே யிடமேவ விடையேறி யெதிரே தோன்ற, வமைவருமா னந்தவெள்ளத் தமிழ்ந்தியெழுந் திருகணீ ரருவி பாய, வெமையுடையா யருளுகென விணையடிக்கீழ்ப் பலமுறைதாழ்ந் தேத்திநின்ருன், முமையுலகுந் தருபரமன் முன்னியதென் பன்னுகென முறையிற்ருழ்ந்தே.

அனகவட திசையரசின் கடிச்சிறியேற் கருளுகென் வதனை நல்கிக், கனகநவ நிதிமுழுதுன் கைப்பொருளா குகநீங் காதற் ருேழ, னெனவமர்கென் றினிதளித்தாங் கெண்ணியன யாவுமளித்தியாண்டுஞ் செல்லு,நனே மலர்புட் பகவிமானங்கதைமுற் றிண்படைக ணயப்ப நல்கி, (கச)

ஏகுகென விடையருளி யெழுந்தருளி மறைந்தருளி யிலிங்கத் துற்ருன், சேகுடைவெள் விடையாதி சிதம்பரநா யகற்பணிந்து நீசி யாசை, மீகுலவத் தனியரசுவீற்றிருந்தெம்

பிரானடிக்கே விளைபே ரன்போ, டோகைபெரு கியவாழ்ந்
தா னுத்தரமா திரக்காவ லுறுகு பேரன். (கரு)

திருந்தகுகா சிபமுனிதன் றிருத்தனைய னும்மவன தேயன்
முன்னு, வருத்தியதன் றாய்மூத்தாட் கடிமையாங் கொடு
மையற வகல்வான் சென்று, மருத்துகடங் கொணர்தருமா
வலிபெறுவா னிச்சித்த வடத்தின் மேவிப், பருத்தெழுமன்
பாதிசிதம் பரநாதன் டிருவடியிற் படரச் சென்றான். (கசு)

சென்றுதிரு முனந்தாழ்ந் துதிருந் துதி பலபுகன்று சிந்தை
மேவட்ட, தொன்றவருள் கெனவேண்டி யொண்டவமாங்கொ
ருசிறைபுக் குளுற்று வானீ, ரின்றியமை யாதெனவவ் விரு
மபதிய வாசிதிசை யேகி யாங்கட், டன்றனிமூக் கினிற்கீண்
டோர் தடங்குடினை தோற்றினனச் சகுன வேந்தன். (கஎ)

அக்குடினை கெருடநதி யாங்கெடில நதியெனவு மருவியா
ங்கே, புக்கொழுகு நறுஞ்சுவையப் புண்ணியநீர் தினமூழ்
கிப் புனித னாகித், தக்கதவம் பற்பலநாட் டான்புரிகா லோ
ம்புரிய சைல நங்கை, பக்கமுற வாதிசிதம் பரநாத னெதி
ருறவப் பதங்க ராசன். (கஅ)

எழுந்துதிரு வடிமலர்தாழ்ந் திறைஞ்சியருந் துதிபாடி யின்
புற்றாடி, யழுந்துதுய ரொழிந்தினிய வருள்புரிய வருபெ
ரிய வரிவை யோர்பாற், றழுந்துரிய வேழைபுரி தவமிது
வோ சுரர்முனிவர் தமக்குங் கிட்டாக், கொழுந்துமதி வே
ணியநின் குலரூப தரிசனநேர் கூட்டிற் றெந்தாய். (ககூ)

திருவருளின் பெருவெள்ளஞ் செலுத்தவெழுந் தருளிய
வித் திறமென் சொல்கே, னருண்முதலே யெனத்துதிக்கு
மத்தகுபுள் ளரசினையாங் கமல ஞேக்கி, வருதிகக பதியுன
க்கு வானமுதஞ் சென்றுகொடு வருபே ராற்றன், மருவியநீ
புரிதவத்தான் மகிழ்ந்தனம்வேட் டாங்கதுநீ வாய்ப்பதாக.

இத்திருவெண் ணீறுதரித் திம்மனுவுச் சரித்தேகி யெண்ண
முற்றிக், கத்துருவென் பாட்கடிமைக் கடுந்தொழினின்றாய்
செயலைக் கழற்றி வாழ்கென், றுத்தமவெண் ணீறளித்தாங்
குரியதிரு வைந்தெழுத்து முணர நல்கி, யத்தனெழுந் தரு
ளினனுங் கச்செயலாற் றுபுகலுழ னவல நீத்தான். (உக)

போற்றுறுமந் நீற்றொளியப் புள்ளிறைதன் முகத்தென்றும்
பொலியப் பெற்றான், றேற்றியவைந் தெழுத்தின்முனத் திற
ற்கருடப் பெயரினிது திகழப் பெற்ற, தாற்றலினிச் சித்தவ
டத் தடுத்திடர்நீத் தின்புற்றோ ரளப்பிலாதோர், சாற்றரிதிவ்
வளவினிலித் தலப்பெருமை யுய்த்துணருந் தன்மைத்தாமே.

சித்தவட நகர்வாழி திருக்கோயி னித்தியமுற் சிறப்புவாழி
யத்தனிவாழ் சிவகாமி யாதிசிதம்பர நாதரடிகள் வாழி
சுத்தபரம் பரைவாழி தூவெண்ணீறுதியபஃ றொகுதிவாழி
மெய்த்தகுநூனெறிவாழிமேவிந் நூனுவிருந்துவிளங்கிவாழி.

## பலகதைச்சருக்க முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௩௨அஅ.

உ

சிவமயம்.

# ஆதிசிதம்பரேசர் பதிகம்.

திருமணக்குஞ் செல்வமெலா மணக்கு மெட்டுத் திசைம
ணக்கும் புகழ்மணக்குஞ் சிறப்பி னோங்குந், தருமணக்குங்
கொடிமணக்கு நீர்ம ணக்குந் தலமணக்கும் பலமலருந்
தழைதயும் வான்றோய், மருமணக்குந் தண்பொழில்கள் சூழுஞ்
சித்த வடமணக்குஞ் சிவகாம வல்லி பாகத், துருமணக்கு
மருளாதி சிதம்ப ரேச னொளிமணக்குந் திருவடிக ளுன்னி
வாழ்வாம். (க)

நாவரச ருழவாரப் பணிமுன் செய்த நற்றலமென் றதிகை
புகா நம்பி தன்பான், மேவியவன் றிருப்பள்ளி கொளுங்காற்
பாதம் விழுந்திருகாற் சிரஞ்சூட்ட விழித்து நீவிர், யாவ
ரென வறியாயோ வென்று சென்றோ னிலங்குசிவ காமவ
ல்லி யிடத்தான் சித்த, மாவடமே வியவாதி சிதம்ப ரேசன்
மலரடிகள் பலமுறையும் வணங்கி வாழ்வாம். (உ)

வாகீசப் பெருமானார் தமக்கு முன்னே வந்தருளுஞ் சைவ
குல மணிப்பொற் றீப, மாகாத நெறிவிலக்கித் திருவெண்
ணீற்றை யைந்தெழுத்து முபதேசித் தவர்க்குநல்கு, மாகா
தன் ஞானகுரு திலக மென்ன வருதிலக வதிதினமும் வழி
த்தொண் டாற்றிப், போகாம லமர்சித்த வடத்தின் மேவு
புனிதசிதம் பரேசனடி போற்றி வாழ்வாம். (ந)

அருண்மலியு நம்பியா ரூரர் முன்னா ளடைந்துதிருப் பள்ளி கொண்டாங் கமர்ந்த வாறே, தெருண்மலியுந் திருச்சந்நிதா னந் தன்னிற் சென்றடியார் கண்களிப்பத் தெரிசித் தின்பப், பொருண்மலிய வமர்ந்தருளுஞ் சிறப்பிற் றாகப் புகல்சித்த வடத்தமரும் புராண னெம்மா, னிருண்மலியு மிடற்றாதி சிதம்ப ரேச னிணையடித்தா மரைகணித மேத்தி வாழ்வாம்.

முத்தொழிலி னிடைத்தொழில்செய் முகுந்த முன்னோன் முதுக்குறைவு குறைந்ததிக மோக னாகிப், புத்தமுதுங் கைக்குமெழிற் பிருந்தை தன்னைப் புணர்ப்பதனாற் புணர்ந்திடவும் பொன்றி டாமோ, கத்தையகல் வித்துரிய திருவை யாங்கே கடிமணஞ்செய் வித்தருளுங் கருணை மூர்த்தி, சித்தவடத் திருக்கோயின் மேவு மாதி சிதம்பரநா யகன்மலர்த்தாள் சேர்ந்து வாழ்வாம். (ரு)

மாமறையோர் தமக்குயர்வு தருதற் கன்னோர் வழிவந்த வில்வலன்வா தாவி யாவி, போமுறைசெய் தனதோடம் பூணு கென்னாப் பூட்டியது தனைநிகரும் புனித மேலோ, னாமலைய முனிக்ககல்வித் தவன்போர்த் தீர்த்த மவிர்தரச்செய் சித்தவடத் தமல னூற்றார், தோமகல வருளாதி சிதம்ப ரேசன் றுணையடிக்கீ ழணைந்திறைஞ்சித் துதித்து வாழ்வாம்.

அன்னையுடன் பிறந்தவட்காற் றடிமை நீக்கற் கமுதுகொணர் தரவானத் தடையு மாற்ற, றன்னையுற வந்திடப சிருங்க நாப்பட் டரிசித்தேத் தியகருடன் றனக்கு முன்னாண், மன்னியவெண் ணீறளித்தாங் கமுது கொண்டு வரும்வலி

தந் தருள்சித்த வடத்திலே மேவு, மின்னியசெஞ் சடையாதி சிதம்ப ரேசன் விரைமலர்த்து மரையிணைத்தாள் விரும்பி வாழ்வாம். (எ)

மருள்காட்டி யாவரையு மையல் பூட்டி வசமாக்கு மடவார் தம் வாஞ்சை வீட்டி, யருள்காட்டி யறங்காட்டிப் பொரு ளுங்காட்டி யன்புடையார்க் கின்பமெலாமமையக் காட்டிப், பொருள்காட்டும் போதநிலைத் தொடர்பு காட்டிப் புனிதா த்து விதபோகம் பொருந்தக் காட்டித், தெருள்காட்டுஞ் சித் தவடத் தமரு மாதி சிதம்பரநா யகன்மலர்த்தாள் சேர்ந்து வாழ்வாம். (அ)

திருவருளாற் றமக்கடுத்த சூலை நோயைச் செற்றிடமுன் பிறந்தாரைச் சேர்வே னென்று, மருவியவா கீசருக்குத் தீக் கை செய்து மருங்கழைத்து வருதிலக வதியார் வேண்ட, வருளியுழ வாரமளித் ததிகை செல்வா னவர்க்களித்த சித் தவடத் தமலன் வானோர், பரவிவழி படுமாதி சிதம்ப ரே சன் பதமலர்க ணிதமணுகிப் பணிந்து வாழ்வாம். (கூ)

சந்திரன்வான் குருசாப நீசத்தன்மைதணப்பவடைந்திறை ஞ்சவரு டந்தன் ஞானைத், தந்தலைமேற் கொண்டருளித் தனது நாமஞ் சந்திரசே கரனெனக்கொ டையையின் வாரி, யிந்திரன கௌதமசா பத்தை நீக்கி யினிதருளுஞ் சித்தவ டத் திறைவ னுரு:நந்தனயன் பணியாதி சிதம்ப ரேச னறை மலர்த்தாண் முறைவழுத்தி நயந்து வாழ்வாம். (கo)

முற்றிற்று.

உ

சிவமயம்.

# சிவகாமியம்மை பதிகம்.

பூமகட்கு நாமகட்கும் போதமகட் குந்தனது பொருவின்
மூன்று, மாமலர்க்கட் பார்வைதரூஉ வளர்செல்வம் பெரு
ங்கல்வி வரமெய்ஞ் ஞான, மாமிவற்றை யுயிரெவைக்கு
மளித்தருளுஞ் சித்தவடத் தன்னை சேர்ந்தார், தோமகற்றுஞ்
சிவகாம சுந்தரிசே வடிகணிதங் துதித்து வாழ்வாம். (க)

ஏடுடைய மலரவன்மாற் கினிதருளுஞ் சித்தவடத் திலகு
மன்னை, காடுடைய வரன்சிவர கசியமெலா நிறைந்தொளி
ருங் காதாண் மாதா, பீடுடைய பிரமபுரப் பெருவாழ்வெங்
குலதெய்வப் பிள்ளை போற்றுந், தோடுடைய சிவகாம சுந்த
ரிசே வடிகணிதங் துதித்து வாழ்வாம். (உ)

அறம்வளரப் பொருள்வளர வவனியெலாஞ் சுகம்வளர
வமல ஞானத், திறம்வளர வத்துவிதச் சீர்வளர வருட்கா
ழிச் சேய்க்கந் நாளி, னிறம்வளருந் திருமுலைப்பா னேர்ந்த
ளித்தாள் சித்தவட நிலவ மேவுந், துறம்வளருஞ் சிவகாம
சுந்தரிசே வடிகணிதங் துதித்து வாழ்வாம். (ந)

ஆரணங்க ளொருநான்கா லருங்கலையா லயனரியா லளக்க
லாகாக், காரணங்கற் பனைகடந்த கௌரிசிவை பகவதிமுக்

கண்மணி யென்றுஞ், சிரணங்கு சித்தவடத் திருக்கோயில் ீற்றிருக்குஞ் செல்வி வான்மைச், சூரணங்கொள் சிவகாம சுந்தரிசே வடிகணிதந் துதித்து வாழ்வாம். (௪)

தெளவெண் மதிநிகருந் திருமுகமுங் கருணைபொழி திருக் கண் ணேக்கு, மாதர்மடப் பிடிநடையும் வரதமுத ஞற்கர மும் வவங்கு மம்பு, சாதமலர்த் திருப்பதமுந் தான்காட்டிச் சித்தவடத் தலத்தின் மேவுஞ், சோதிதிகழ் சிவகாம சுந்தரி சே வடிகணிதந் துதித்து வாழ்வாம். (௫)

சகமுழுதுந் தருமாதா சங்கரிகங் காளியிமா சலைமா தேவி, தகனையிப முகனையிரு குமரரெனப் பெற்றருளுங் குமரி லி, பகவதியம் பிகைகௌரி பரமசிவை சித்தவடம் பணி ந்தார் யார்க்குஞ், சுகமுதவு சிவகாம சுந்தரிசே வடிகணிதந் துதித்து வாழ்வாம். (௬)

மன்னுயிர்க்கு மும்மலவா தனைநீக்க மலபாகம் வருவித் தற கே, யன்னவற்றி னுடனுகு திரோதையாய்ப் போகமுழு தருத்தி நீக்கிச், செந்நிலைக்குய்த் தருள்கருணி சித்தவடத் தமர்ந்தடியிற் சேர்ந்தார் யார்க்குந், துன்னருட்செய் சிவ காம சுந்தரிசே வடிகணிதந் துதித்து வாழ்வாம். (௭)

சித்தவடத் திருக்கோயிற் சித்தவடத் திருக்கோயிற் சிவை பொற் பாத, பத்திநெறி முத்திநிலைப் பாங்குறுமென் றறிஞ ரெலாம் பரவ நின்ரு, ளத்தகைய வருளினெமை யழைத்

துமல மகற்றியிரண் டற்ற வாய்மைச், சுத்தமருள் சிவகாம
சுந்தரிசே வடிகணிதந் துதித்து வாழ்வாம். (அ)

மதிதலைய மலர்க்கொம்பேமறைப்பொருளே சித்தவடமருவு
மன்னே, நதிதலைய கற்பகத்தி னறுங்கொடியே யருடியெண
நாளுந் தாளிற், பதிதலைய ராமுகுந்தன் பங்கயனு திபவம
ரர் பணிந்திறைஞ்சித், துதிதலையார் சிவகாம சுந்தரிசே வடி
கணிதந் துதித்து வாழ்வாம். (கூ)

பரவிவழி பாடுபுரி பண்புடைமெய் யன்பினரிப பாரின் மே
ன்மேற், பெருகுபொரு ணன்மனைவி பிறங்குமகப் பேறுமு
தற் பெற்று வாழ்ந்தே, யரியபர மோக்கமுஞ்சார் தருவா
கச் சித்தவடத் தமரு மன்னே, சுருதிபுகல் சிவகாம சுந்தரி
சே வடிகணிதந் துதித்து வாழ்வாம். (க0)

முற்றிற்று.

சிவமயம்.

# திருத்தொண்டர் பதிகம்.

கவுணியர்தந் தவநிலையே காழியர்த மேழிசையே கனிந்தா
ருள்ளத், தவிருமணித் திவள்விளக்கே யாரமுதே பேரரு
ளே யரிய மோக்க, சிவமயமே யெவருமுறத் திருமணத்
தைப் பெருமணத்திற் செய்த வாழ்வே, கவலுறுமென் பவ
மொழித்துன கழல்புகுதும் வழியொழுகக் கருது வாயே.

மாதினியார் புகழனார் மதிமீன மூரோகிணிநாண் மலியநே
ற்ற, மாதவமே யுருவாகமாநிலத்தார் மேனிலத்தார் வழிபெற
றேற, வாதரமுற் றரன்பணிகொண் டவனியின்க ணவதரி
த்த வமல வாழ்வை, மேதகுவாகீசமணிவிளக்கதனைத் துள
க்கமற மேவி வாழ்வாம். (௨)

சைவமலாற் சமணாதி சமயமெலாந் தருமிடர்யார் சார்ந்தா
லேனு, முய்வரிதென் றுணர்த்தவரு ளூந்தவம ணுற்றவன்
வந் துறுவெஞ் சூலை, நைவுறவா வணிமூல நாளருள்பெற்
றதிகைநகர் நயந்து பாடித், தெய்விகமாண் சித்தவடத் தம
ர்நாவுக் கரசடிகள் சென்னி சேர்ப்பாம். (௩)

வானத்தார்க் கும்மருஞ்சின் மயப்பிழம்பே யருணிறைவா
கீச வாழ்வே, ஞானத்தாற் றொழுவர்சிலர் ஞானியர்யான்

ஞானத்தாற் றொழுகி லேனென், றூனத்தாற் றுதிநதனைசே
ய்க் காமருந்துண் டாங்கெமக்கே யருள லோர்ந்து, மீனத்
தார் துன்னெறிக்சே யென்மனஞ்சென் றுலேழை யென்
செய் கேனே.                                                                                      (ச)

திருக்கயிலை திருக்கயிலைத் தீரருஞ்செல் லரியதெனத் தேற்
றற் கன்றோ, வுருக்கமொடு முறுப்பிழந்து முந்தியுஞ்சென்
றனையல்லா வறநீ யெண்ணி, லிருக்குமிடத் ததுவருகிற்
கிதுவையாற் றிடைநிகழ்ந்த திறம்பூ தன்றே,பெருக்கருளே
வாகீசப் பெருந்தகையேவெம்பவநோய்பேதிப்பாயே.       (ரு)

அருட்கடலே குணக்குன்றே யடியடைந்தார் மிடியகற்றி யா
ளுந் தேவே, யிருட்கடுவுண் டசனெனன வின்புருவா யமர்
ந்தருள்வா கீச வாழ்வே,தெருட்கலைஞ ருண்ணவுண்ணத்தெ
விட்டாத தெள்ளமுதே நீய னேனை, வெருட்கொடியார் மய
லகற்றி மெய்ப்போத நெறிப்புகுத விடுத்தாள் வாயே.   (சு)

சித்திரையிற் சித்திரைநாண் மணமொழிய வெண்ணெய்நல்
லூர்சென்று பாடி,மெய்த்ததிருத் துறையூரி லுபதேசத தவ
நெறியின் விசாகத் தேற்றுங், கத்தினமே யிரவிருகா லரன்
ருகான் முடிசூட்ட வமர்ந்தாங் கின்றுஞ், சித்தவடந் தனிற்
பள்ளி கொண்டருள்வன்றொண் டர்பதஞ்சிந்தைசேர்ப்பாம்.

திருவாத நகர்மணியைச் சேவேறி மாவேறித் திகழும் வா
ய்மை, யுருவாதல் புரிமணியை யொளிமணியை யளிமணி
யை யுணரே னுள்ளு, மொருவாத குலமணியை யுண்மை

நெறி கடைப்பிடியா துலைந்த புத்தர், பெருவாதந் தெறுமணியைப் பிரசமலர்த் தாள்வணங்கிப் பேணி வாழ்வாம். ()

வேதசிவா கமம்புகலும் விமலபர சிவனேசொல் வேந்தரென்னு, மோதிநிலைத் துறத்திருநா வுக்கரசென் மகாமநுவே மொழியா தோதி, யேதிதனுற் சிவமயமா யிறையருளாற் சித்தவடத் தெய்தி யின்பப், பூதியரு ளப்பூதி பொற்பதமே யற்பொடுநாம் போற்றி வாழ்வாம். (௯)

வான்பரவு நம்மிளவல் வாகீசப் பெருந்தகையார்மதிகொள் வேணி, யான்பரவு கொடியோங்க வகிலமுமிக் கிரதமென வருட்டென் வேதத், தேன்பரவச் செயற்கேவு கருத்தாநற் றிலகவதி யார்தஞ் செய்ய, கான்பரவு மலர்த்தாளே கைதொழுவார் சைவநெறிக் கதிபெற் றூரே. (௧௦)

உலகமெலா மீடேற வோங்குசைவ நாடேற வுண்மை ஞானத், திலகவதி யிளவலெனத் திருநாவுக் கரசரெனத் திகழ்வா கீசர், குலமகவாய் வரப்பெரிது குறித்திழைத்தநெறித் தவத்தின் குணமேவாய்ந்த, புலனிகழ்மெய்ப்பெருஞ்செல்வர் புகழனர் மாதினியார்ப் போற்றி வாழ்வாம். (௧௧)

முற்றிற்று.